The Eelanaatham People's Daily பக்கங்கள் 10

ஈழநாதம்

மக்கள் தினசரி

நாதம் 07 ஓசை 01 திருவள்ளுவர் ஆண்டு 2027 மாசி 07 19 - 02 - 1996 திங்கட்கிழமை Registered as a Newspaper விலை ரூ6-00

மோட்டார் ஊர்திக்கான 96ஆம் ஆண்டுவரி அட்டை

நாளை தொடக்கம் மோட்டார் ஊர்திக்கான 1996-ம் ஆண்டு வரி அட்டை யாழ். மாவட்டத்தில் கொடிகாமத்தில் அமைந்துள்ள தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச்செயலகத்திலும், வடமராட்சியில் மாலுசந்தியில் அமைந்துள்ள அனுமதிவழங்கும்செயகத்திலும்வழங்கப்படவுள்ளது என்பதைமோட்டார் ஊர்தி உரிமையாளர்களுக்கு அறியத் தருவதுடன், தங்கள் ஊர்திகளைமுன்பு (10ஆம் பக்கம் பார்க்க)

தீர்வுத் திட்டம் எதையும் அரசு முன்வைத்ததாக கூறமுடியாது!

ரணில் விக்கிரமசிங்க கருத்து

(கொழும்பு)

அரசு சமாதானத் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளதாக கூறமுடியாது. இப்போது ஆராயப்படுவது அரசியலமைப்புச் சீர் திருத்தங்களுக்கான யோசனையே. தற்போதைய போரையும் அரசியல் அமைப்பு திருத்தத்தையும் ஒன்றாகப் பார்த்துக் குழம்பியடிக்கக் கூடாது. இரண்டுமே வேறுபட்ட விடயங்கள். இவ்வாறு எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் சமாதானத்தைக் கொண்டு வருவதாகக் கூறிக் கொண்டு வந்த அரசு அதன் இலக்கை முற்றாகத் தவறவிட்டுள்ளது; இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணலாம் என அரசு அவசர அவசரமாக செயற் பட்டது.

பின்னர் இராணுவத் தீர்வு காண்பதில் அவசர அவசர மாக செயற்பட்டது. இதுவும் தோல்வி கண்டது. அரசு நீண்டகால நோக்கிலோ குறு

(10 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில் பல்கலை. மாணவன் ராணுவ அதிகாரியால் படுகொலை

நேரில் கண்டவர் தகவல்

(நமது நிருபர்)

தாண்டிக்குளம் இராணுவ முகாமில் வைத்து கடந்த வாரம் பல்கலைக்கழக மாண வன் ஒருவர் இராணுவ அதி காரியால் கழுத்து நெரித்து கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தை நேரில் பார்த்த சாவகச்சேரியைச் சேர்ந்த சந்திரன் என்பவர் எமது செய்தியாளருக்கு இச் சம்பவம் பற்றித் தெரிவித் தார்.

கடந்த 12-ம் திகதி கொழு ம்பு செல்வதற்கென சென்ற வர்களில் எண்மரை தற் கொலைப் படையாளிக ளோடுதொடர்புடையவர்கள் எனக்கூறி அவர்களை இரா ணுவ முகாமொன்றின் அறை யில் வைத்து அடித்துத் துன் புறுத்தியதாகவும் எண்மரில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா நகர் பகுதியில் படையினர் சுற்றிவளைப்பு

(வவுனியா)

வவுனியா நகர்ப் பகுதியை கடந்த வியாழன் நள்ளிரவு சுற்றிவளைத்த படையினர் பொறிச்சாரதிகள், கிளீனர் கள் மற்றும் இந்து இளைஞர் விடுதிகளில் தங்கியிருந்தவர் கள் எனப் பல தரப்பட்டவர் களையும் விசாரணைக்குட் படுத்தினர்.

இதன்போது 160 பேரை தமிழ் மத்திய மகாவித்தியா லயத்திற்குக் கூட்டிச் சென்ற படையினர் அவர்களை தலை மீழாக நிற்கவிட்டு சோதனை

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைஞரைக் காணவில்லை

(வடமராட்சி)

ஆவரங்கால் பகுதியில் தனது வீட்டை பார்க்கச் சென்ற இளைஞர் ஒருவர் கடந்த இரண்டு தினங்களாக இடம்பெயர்ந்த தங்கியிருந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய கடற்பரப்பிற்கு அண்மையில் விடுதலைப் புலிகளின் ஆயுதக்கப்பல்

சிறிலங்கா கடற்படை தளபதி அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் மற் றுமொரு ஆயுதக்கப்பல் இந் திய கடற்பரப்பினுள் நுழைய ஆயத்தமாக இருப் பதாக கிடைத்த தகவலை யடுத்து வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு கடற்பரப்புக ளில் கடற்படையினரை உஷா ராக இருக்கும்படி கடற் படைத்தளபதி மோகான் சம ரசேகர பணித்துள்ளார்.

அதிவேக பீரங்கிப்படகு களின் உதவியுடன் ரக்கெட் நடவடிக்கை மூலம் பாது காப்பு வழங்கும்படி அவர் கேட்டுள்ளார். இப்பிரதேசங் களை உள்ளடக்கி ஓர் பாது காப்பு வலையத்தை உரு வாக்குவதே ரக்கெட் நடவ டிக்கையாகும்.

இதற்கென 200 கடற்படை யினர் ஈடுபடுத்தப்பட்டுள்ள னர். சீனாவிலிருந்து அண் மையில் தருவிக்கப்பட்ட 37 எம்.எம். பீரங்கி பொருத் தப்பட்ட நவீன அதிவேக பீரங்கிப்படகுகளும் இதில் ஈடுபடுத்தப்படவுள்ளன என வும்,

இந் நடவடிக்கைக்கு கண் காணிப்பில் ஈடுபட விமானப் படையின் உதவியும் பெறப் பட்டுள்ளது: என வும் தெரி விக்கப்படுகிறது.

- புத்தூர் மணற்பகுதிக்கு - வீடுபார்க்கச் சென்ற 4 பேர் படையினரால் கைது

(நமது நிருபர்)

புத்தூர் மணற்பகுதிக்கு வீடு பார்க்கச்சென்றவர்களில் நான்குபேர் இராணுவத்தின ரால் கைது செய்யப்பட்ட னர்.

நேற்று முன்தினம் புத்தூர் மணற்பகுதிக்கு தமதுவீடு களைப்பார்க்கச் சென்றவர் களானகந்தசாமி சேதுரட்ணம் (வயது 26) மூன்று பிள்ளை களின் தந்தையான வெள் ளையன் இரத்தின சிங்கம் (வயது 32) பூதன் சரவணை (வயது 60) இவர்களுக்கு உத வியாகச் சென்ற மட்டுவில் வடக்கைச் சேர்ந்த செல்வ ரட்ணம் - குணசிலன் (வயது 23) என்பவர்களே இராணு வத்தால்கைதானவர்கள் என தெரியவந்தன. மேலும் இவர் களுடன் சென்றவர்கள் சிலர் தப்பி வந்துவிட்ட தாகவும் தெரியவந்தது. (நா)

நாரஹன்பிட்டி விகாரையில் கைக்குண்டு கண்டுபிடிப்பு

(கொழும்பு)

நாரஹன்பிட்டியில் தர்மா ராமா விஹாரை வளவு ஒன் றினுள் புதைத்து வைக்கப் பட்டிருந்த 16 கைக்குண்டு களும் 2 ஆர் பி.ஜி.எறிகணை களும் நேற்று பொலிசாரி னால் கைப்பற்றப்பட்டதாக ரூபவாஹினி தெரிவித்தது.

இச்சம்பவம் தொடர்பாக இவ்விகாரையில் தங்கியிருந்த வல்வெட்டித்துறையை சேர் ந்த 56 வயதான இ. தர்மலிங் கம் என்பவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும்இவர்உதவித்தொழில் ஆணையாளராக கடமையா ற்றி வருபவர் எனவும்,

நாரஹன்பிட்டி இராணு வப் பொலிஸ் முகாமருகே உள்ள விகாரையிலிருந்தே இந்த ஆயுதங்கள் புதைக்கப் பட்ட நிலையில் மீட்கப்பட் டன எனவும் தெரிவிக்கப்பட் டது.

மருந்துப்பெட்டிக்குள் ரி-56 ரக துப்பாக்கி ரவைகள்

மாத்தளைப் பகுதியில் கண்டுபிடிப்பு

மருந்து விற்பனை நிலையம் ஒன்றிற்குக் கொண்டுவரப் பட்ட மருந்துப் பெட்டிக்குள் ரி-56 ரக துப்பாக்கி ரவை காணப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது. இச்சம்பவம் மாத்தளை பொலிசாருக்கு பெரும் சந்தேகத்தை ஏற் படுத்தியுள்ளது.

மருந்துச் சாலையின் உரி மையாளர் தெரிவித்த புகா ரை அடுத்து பொலிசார் இது தொடர்பான விசாரணை களை மேற்கொண்டு வரு கின்றனர்.

கரிகாலனைப் பிடிக்க பொறிவலை விரிப்பாம்

விடுதலைப் புலிகளின் அரசி யல்துறை துணைப் பொறுப் பாளர் கரிகாலனை பிடிக்க பொறி வலையை படையினர் விரித்துள்ளதாக வீக்கென்ட் எக்ஸ்பிரஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விரைவில் கரிகாலனை பிடி த்து விடுவோம்என சிறிலங்கா புலனாய்வு வட்டாரங்கள் கூறியதாகவும் அப்பத்திரிகை கூறுகிறது. இதேவேளை கொழும்பில் புலிகளின் நட வடிக்கைக்கு உதவும் அரசி யல் வாதிகள் கண்காணிக்கப் படுவதாகவும் விரைவில் இவர்கள் பிடிபட்டுவிடுவர் என உயரதிகாரிகள் தெரிவித் ததாகவும் அப்பத்திரிகை கூறுகிறது.

ஏழாம் ஆண்டுச் சிறப்பிதழ்

வரி விளம்பரம்

இடமாற்றம்

இதுவரை சாவகச்சேரி சங்கத்தானையில் இயங்கிவந்த சிவசம்பு வைத்தியசாலை கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டுள்ளது. (15704)

வாடகைக்கு

சில்வர் பீங்கான், சில்வர் ரம்லர், தண்ணீர் ரம்லர், ஐஸ்றீம் கப்ஸ், தண்ணீர் ஜொக், கறிவாளிகள், பந்தி பாய், பிளாஸ்ரிக் பாய்கள், சில்வர்றே, சமையல் பாத்திரங்கள் இன்னும் பல வெள்ளை மாளிகை, பெரிய அரசடி, சங்கத்தானை. (15591)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மருத்துவ பீடச்சபை

மருத்துவ பீடத்தின் மருத்துவ பீடச் சபை 20.02.1996 ம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10 00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும். ஆசிரியர்களும், அங்கத்தவர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பீடாதிபதி/மருத்துவம்
17-02-1996 (சி/13427)

காணவில்லை

தியாகராசா கணேசநாதன்

செல்வா என்றழைக்கப்படும் தியாகராசா கணேசநாதன் (வயது 44), (மந்தபுத்தியுள்ளவர்) 5'8'', கறுப்புநிறம், 15-2-96தொடக்கம் காணவில்லை கடையாகப்புறப்படுகையில் நீலநிற சேட்டும்நீலநிறச்சாரமும் அணிந்திருந்தார். இவரைக்கண்டவர்கள் பின் வரும் முகவரியுடன்தொடர்பு கொள்ளவும்,

திருமதி தி. கனகலிங்கம்
மே/பா திரு. அ. சிறிஸ்கந்தராஜா
26/2, சங்கம் ஒழுங்கை,
சங்கத்தானை, சாவகச்சேரி.
(15722)

நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

31-ம் நாள்

அமரர்
கந்தையா செட்டியார் இராமநாதன்
(பட்டயக் கணக்காளர், முன்னைநாள் கணக்காளர் Ceylon Cold stores, முன்னை நாள் தலைவர் ஆதீன மகாசபை ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள் கோவில், முன்னைநாள் தலைவர் சோதிட ஒன்றியம், எழுத்தாளர்)

மலர்வு 02-01-1918 உதிர்வு 21-01-1996

அன்பின் அரவனைப்பாய்பண்பின் சிகரமாய் பாசத்துடனும் கண்டிப்புடனும் வளர்த்து கல்வியறிவூட்டி, எங்களுக்கு மட்டுமல்ல ஊருக்கே வழிகாட்டியாய், உத்தமனாய் வாழ்ந்திட்ட எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஒரு திங்கள் என்ன பல்லாயிரம் திங்கள் சென்றாலும், உங்கள் நினைவு எம் மனதை விட்டகலாது.

90-ம் நாள்

கப்டன் நியூட்டன் (சத்தியபாலன்)
(கிட்டு படையணி)
வாசுதேவன் ஜெகன் மோகன்
(யா/மத்திய கல்லூரி பழைய மாணவன்)

மழலையாய் 29-07-1972 மாவீரனாய் 26-11-1995

அந்நியன் படையழித்த மாவீரா
மண் மானம் காத்த தியாகமே
மாதலைவன் சேனையிலே இணைந்து
மறப்புலியாய் ஆற்றலுடன்
போரிட்டாய் சத்தியபாலனே
தோற்காது உன் இலட்சியம்
தாயகம் மீளும்
இது உறுதி!

20-02-1996 நாளை இவர்களின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

த. முகவரி:- K.C. வாசுதேவன்
C/o மேரி சிவராஜா
தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

நி. முகவரி:- K.C. வாசுதேவன்
21, யாழ் வீதி,
யாழ்ப்பாணம்.

(15527)

31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

நன்றி நவிலலும்

பிறப்பு
12-02-1917

இறப்பு
20-01-1996

அமரர்
கந்தையா அழகரத்தினம்
(கலைநகர், வட்டுக்கோட்டை)

அன்போடு எமை வளர்த்து அறிவூட்டினாய்
அரவணைத்து ஆளாக்கி உயரவைத்தாய்
எண்ணோடு எழுத்தூட்டி எம்மைவிட்டாய்
இயலிசை நாடகமும் இலங்க வைத்தாய்
விண்ணோடு உறைகின்ற விமலன்தாளே.
விரைந்தனையோ எமைவிட்டு இன்பந்தேடி
எந்நாளும் உன்னாத்மா இணையில்லாத
இறைவன்தாள் இருக்கின்ற நிலையே காண்பாய்.

நன்றி.

மக்கள், மருமக்கள்,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. பேரப்பிள்ளைகள்.
(15542)

ஈழநாதம் - தமிழீழ மக்களின் இதயநாதமாக என்றும் திகழ எமது நல்வாழ்த்துகள்.

- ☐ வானொலி கருவிகள்
- ☐ மின் உபகரணங்கள்
- ☐ அன்பளிப்புப் பொருட்கள்
- ☐ அழகுசாதனப் பொருட்கள்

அனைத்தும் ஒரே இடத்தில்பெற.....
நம்பகமான இடம்

விமலாஸ்
9, நவீனசந்தை - சாவகச்சேரி
(சி-13419)

☐ ஈழநாதத்தின் தமிழ்ப்பணி சிறக்க வாழ்த்துக்கள் ☐

அறிவாற்றலை வளர்க்கும்
பாடசாலை நூல்கள்
உபகரணங்கள் அனைத்திற்கும்...

ஸ்ரீ சுப்பிரமணிய பொத்தகசாலை
தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.
(சி-13418)

ஈழநாதத்தின்
மக்கள் பணிசிறக்க
எமது வாழ்த்துக்கள்...



நவீன முறையில்
கண்களைப் பரிசோதித்து
கண்ணாடி பெறவும்,
உறுதியான பற்களை
கட்டிக்கொள்ளவும்.

லாவண்யா
(பல்-மூக்குக்கண்ணாடி அகம்)
உரிமையாளர்: Dr. றெஜி சொலமன்

- யாழ் வீதி, (மகாத்மா தியேட்டர் அருகில்) நெல்லியடி.
- கண்டி வீதி, A.G.A. அலுவலகம் முன் சாவகச்சேரி.

முக்கிய குறிப்பு:
V.T. அன்சன்ஸ், V T. பெர்ணாண்டோ ஆகிய ஸ்தாபனங்கள் தற்போது லாவண்யா என்னும் பெயரில் இயங்குகின்றன.
(சி-13417)

வாழ்த்துச் செய்தி



தேசிய உணர்வுடன் கூடிய தேசிய விடுதலையை வெளிப்படுத்தும் பாரிய பணியில் இன்று எமது மக்களும் அவர்தம் செயல்பாடுகளும் காணப்படுகின்றபோதும், அதனுடன் கூடிய வெளிப்பாடுகளும், நிகழ்வுகளும் புதிய பல பரிமாணங்களைப் பெற்று புதுப் பொலிவுடன் மக்கள் தமது உரிமைகளை நிர்ணயிக்கும் தன்மையையும் பண்பையும் பத்திரிகைகள் இன்று வெளிக்கொணர்கின்றன.

இனவாத அரசின் திட்டமிட்ட இன, பொருளாதார, கலாசார அழிப்புகளின் மத்தியில், எமது மக்கள் இன்று பல்வேறு துன்பங்களையும் துயரங்களையும் அனுபவிக்கின்ற வேளையிலும், அவற்றை வழிப்படுத்தி நெறிப்படுத்தும் அளப்பரிய பொறுப்புகளை ஏற்று தமது போராட்ட உணர்வுடன் கூடிய அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி, அதனூடாக அரசின் நோக்கை சிதைத்து உலகமே வியக்கும் வகையில் தமிழ் இனம் வளம்பெற - தரணியில் நிமிர்ந்திட தன்னை அர்ப்பணித்துச் செயல்படும் ஈழநாதம் தனது 6ஆம் ஆண்டை நிறைவு செய்துள்ளமை போற்றத்தக்கது.

மக்களது உணர்வுகள் மரணிக்க அவர்களது கருத்துகளும் முயற்சிகளும் வெளிவரும் அனைத்து மூலங்களையும் திட்டமிட்டு தடைகளை விதிக்க அரசு முனைகின்ற போதும் எமது மண்ணில் வெளிவரும் பத்திரிகைகள், அரசுக்குச் சவாலாக, அதனது பணிகளையும் ஆக்கங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தி எமது மண்ணையும் மக்களையும் வளம்படுத்தும் பாரிய சமூகத்தைக் கொண்டு இவ்இக்கட்டான சூழலின் மத்தியில் செயற்படுவது பாராட்டுக்குரியது.

இந்த வகையில் தமிழர் தம் மனங்களில் உறைந்திட்ட, அவர்களின் இதயங்களோடு ஒன்றிணைந்த ஈழநாதம் இழப்புகளின், அழிவுகளின் மத்தியில் தனது பணியைத் தொடர்ந்து தேசியப் பற்றுடன் கூடிய சேவையை நல்கி தனது 6ஆம் ஆண்டை நிறைவு செய்து 7ஆம் ஆண்டில் காலடி பதிப்பது பாராட்டுக்குரியது. உண்மையும், நேர்மையும், திறமையும் கொண்டு அவற்றை மக்களிடையே வெளிப்படுத்துவதில் தொன்மையும் தவறாத தன்மையும் கொண்ட ஈழநாதம் பத்திரிகை தனது மேலான சேவையில் பல அரும்பெரும் சாதனை படைத்து 7ஆம் ஆண்டில் சிறப்புடன் செயல்பட எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

சு. ப. தமிழ்ச்செல்வன்
அரசியல்துறைப் பொறுப்பாளர்
தமிழீழம்.



ஈழநாதம் இன்று ஏழாவது ஆண்டில் காலடி பதிக்கின்றது. விடுதலை பெறத்துடிக்கும் ஓர் இனத்தின் குரலாக-அந்த இனத்தின் விடுதலை உணர்வின் வெளிப்பாடாகபிறப்பெடுத்த ஈழநாதம்தனது குறிக்கோளை நிறைவேற்றுவதில் அயராது செயற்பட்டு வந்திருக்கிறது. அந்த இனத்தின்அரசியல், சமூக,பொருளாதார பண்பாட்டு செயற்பாடுகளில் தனது பங்களிப்பைச் செய்து வந்திருக்கிறது.

பல்வேறு நெருக்கடிகள் மத்தியிலும் பணியாற்றி வந்ததுடன் வளர்ச்சிப் பாதையில் வீறு நடை போட்டு வரும் ஈழநாதம் கடந்த ஆண்டில் வலிகாமம்மக்கள் எதிர்கொண்ட பாரிய இராணுவ நெருக்கடியை அவர்களுடன் இணைந்து எதிர்கொண்டு இடம்பெயர நேர்ந்தது. எனினும் அதனால் தனது பணியை இடைவிடாது செய்ய முடிந்துள்ளது என்பதில் திருப்தி கொண்டுள்ளது.

தமிழீழ மக்களுக்குப் பாரிய அரசியல் வெற்றியைப் பெற்றுத்தந்த-வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கப்போகும் வலிகாமம் மக்களின் இடம் பெயர்வின்போது, அம்மக்களின் உணர்வலைகளையும் தளராத இலட்சியப்பற்றையும் ஈழநாதம் வெளிப்படுத்தியிருக்கிறது.

இந்தவகையில்எதிர்காலத்திலும் ஈழநாதம் தனது பணியை செவ்வனே செய்யும். தமிழீழ மக்கள் நடத்தும் விடுதலைப் போராட்டத்தில் அம்மக்களுடன் தோளோடு தோள் நின்று பணியாற்றுவதுடன் அம்மக்களின் அரசியல், சமூக, பொருளாதார பண்பாட்டு செயற்பாடுகளில் தனது பங்களிப்பை தொடர்ந்தும் வழங்கும்.

இதேவேளை ஈழநாதம் தனது பணியை இடையறாது மேற்கொள்ள தமிழீழ மக்கள் வழங்கிய ஆதரவு மகத்தானதாகும் இதற்காக எமது வாசகர்கள், விநியோகஸ்தர்கள், விளம்பரதாரர்கள் உட்பட அனைத்துத் தமிழீழ மக்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடுதொடர்ந்தும் அனைவரதும் பங்களிப்பையும் ஆதரவையும் எதிர்பார்த்திருக்கிறது.

- ஆசிரியர்

போராடும் தேசத்துப் புயலுக்கு இன்று பிறந்த நாள்..

—புதுவை இரத்தினதுரை

ஈழநாதமே!
உனக்கின்று ஏழுவயதாமே
பிள்ளைக்கு ..... என் பிறந்த நாள் வாழ்த்து.
நேற்றுப் போலிருக்கிறது நின் பிறப்பு.
காலத்தின் கால்களுக்குத்தான் எத்தனை வேகம்?
எம் முற்றத்துப் பூவே!
எத்தனை அழகுன்னில் ஏறியுளது.
பார்க்கும் போதிலெல்லாம் பரவசம்
வையப் பரப்பைச் சுருக்கிச் சுமந்து;
எம்மண்ணின் நிகழ்வை மடியிற் கட்டி,
காலையெம் சாளரம் ஊடே .....
உள்ளே வருவாய்.
நீ வந்ததும் தான் நிலம் வெளிக்கும்,
கோழி சிலம்ப;
கோயில் மணியொலிக்கும்,
வேதநாயகனின் நாதரூபனே!
வெள்ளிமணி சப்திக்கும்
பிள்ளைப் பாதமே!
உன் பிறந்த நாள் ஒவ்வொன்றுக்கும்
வாழ்த்துரைக்கும் வரம் பெற்றேன்.
தினசரிகளுக்கு ஒரு வரைவிலக்கணமுண்டு
கொலை வழக்கின் குறுக்கு விசாரணை,
கற்பழிப்பின் கள விவரணம்,
கூரை பிரித்த கொள்ளையின் முழு விபரம் என
பரபரப்புக்குப் பத்தியிடுவது,
இவையேதுமில்லாத களவீரன் நீ.

போராடும் தேசத்தின் புயலே!
வெற்றி கிட்டும்வரை வீசுக.
என்றோ ஒரு நாள்
தமிழீழம் உனக்குத் தலைப்புச் செய்தியென
சென்ற வருடம் சொல்லி வாழ்த்தினேன்,
சத்தியம் பொய்யாகிப் போகாது,
விரைவிலெம் தேசம் விடியும்.
பூமிப்பந்தில் புதிய தேசமாய்
இந்துமா கடலில் எம் தாயகம் வந்து எழும்.
உன்முகத்தில்
ஆயிரம்கோடி சூரியவெளிச்சமாய்
எம் மண்ணின் புதிய முகவரி சுமந்து
ஒரு காலை எம்வீடு புகுவாய்.
உன்னில் கண்விழிக்காது
இன்று வேலைக்குப் போவோர் வெகுகுறைவு.
கடலுக்குள் படகேற முன்பும்,
கச்சேரிக்குப் 'பஸ்' ஏற முன்னரும்,
உன்னைப் பார்த்தே உறுதி செய்கின்றனர்.
பல்லாண்டு பாடினேன் இப்பாவலன்.
எம்மாளிகையின் மாடவிளக்கே!
வாழிய
ஈழநாதமே! இன்னும் வளர்க.
எவரெவரெல்லாம் உந்தன் சொந்தமோ
அவரவருக்கெல்லாம் அற்புதம் விளைக.
உன்னில் புதிய தேஜஸ் விளங்குக.
உரிமைக்கான குரலாய் முழங்குக.
சொன்னது நடக்கும் சொற்களுக்குரியவன்
எண்ணியபடியே எல்லாம் நலம் பெறும்.
கண்மணி!
காலைவரும் எங்கள் நாதமணி!
உனக்கெனது வாழ்த்துக்களை
வன்னியிலிருந்து வழங்குகின்றேன்.
புலரும் ஒவ்வொரு பொழுதிலும்
உனக்குப் பெருகுக நலம். □

ஆதிமனிதனும் ஓவியமும்

அகநி

ஆதிமனிதனின் கருத்து வெளிப்பாட்டுக்கு முதன் முதலில் வாய் மூலமான ஒலிகளையும் சைகைகளையுமே கையாண்டான். அவ்வாறு கையாண்ட மனிதனால் போதிய கருத்துப்பரிமாற்றத்தினை எல்லா விடயங்களிலும் கையாள முடியாத நிலையில் தனது சிந்தனையை, கருத்தினை வெளிப்படுத்த தகுந்த ஊடகமின்மையால் எழுத்துக்களின் மூலத்தை கண்டுபிடிக்க நேர்ந்த தெனலாம். ஆதி மனிதன் கண்டு பிடித்து பயன்படுத்திய எழுத்துக்களின் மூலமானது, தான் கண்டவற்றை அதன் வடிவத்தை அப்படியே வரைந்து காட்டிய உருவங்களேயாகும். ஓவியத்தின் மூலம் கருத்துப் பரிமாற்றத்தினை மேற்கொண்ட போதே ஆதி மனிதன் ஓவியக்குழந்தையை பிரசவித்தான் என்று சொல்லலாம். இந்நிகழ்வே ஓவிய வரலாற்றின் முதற் கட்டம் எனவும் குறிப்பிடலாம்.

இற்றைக்கு கி.மு. 3500-ம் ஆண்டளவில் வாழ்ந்த எகிப்தியமக்கள் எழுத்துக்களை பயன்படுத்திய ''கைறோகிளிப்ஸ்'' குறியீட்டு எழுத்தானது முற்று முழுதாகவே இயற்கையில் அமைந்துள்ள பறவைகள், ஊர்வன, மனிதன் போன்றவற்றினை அப்படியே வரைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதிலும் செயல்களை உணர்த்துவதற்கு மனிதனின் குறிப்பிட்ட அச் செயலுக்கான அங்கத்தின் மாற்றத்தினை வரைவதன் மூலம் வெளிப்படுத்தினர். உதாரணமாக அழுகையை வெளிப்படுத்த கண்ணையும் கண்ணீர் துளியையும் தன் எழுத்தில் அமைத்துக் கொண்டான். இதைவிட பிராமி எழுத்துக்களும் இவ்வகையில் அமைந்துள்ளமைஅகழ்வாராட்சியின்போது கண்டு பிடிக்கப்பட்ட கல் வெட்டுக்களின் மூலம் தெளிவாகின்றது.

வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் குகைகளில் வசித்ததனால் குகைகளினுள்ளே தான் நாளாந்தம் இயற்கையில் பார்த்தவற்றை அப்படியே வரைந்தான். வரையும் சிந்தனை அவனுக்குத் தோன்றியது பற்றி பல வேறுபட்ட ஆராய்ச்சியாளர்களும் வெவ்வேறு கருத்துக்களை வெளியிடுமளவிற்கு ஆழமான சிந்தனையை தூண்டிவிட்டது. இவ்வகையில் இவை வேட்டையைத் திட்டமிடும் நோக்கில் வரைந்தான் எனவும், இன்னொரு சாரார் கற்கால மனிதன் நிரந்தர வதிவிடங்களில் பயிர்ச் செய்கையை மேற்கொண்ட போது அவனுக்கு கிடைத்த ஓய்வினால் வரைந்தான் எனவும் பல்வேறுபட்ட கருத்துகள் நிலவி வருகின்றன. எவ்வாறெனினும் ஆதி மனிதன் ஓவியம் வரைவதற்கு தூண்டப்பட்டான் என்பதும் அவன் வரைந்த ஓவியங்கள் உயிரோட்டமுள்ளனவாக விருந்தன என்பதும் உண்மையே. எனினும் இவை தற்கால ஓவியர்களின் பொதுப்பார்வைக்கான படைப்புகளாக அல்லாமல் தன்னுணர்வு வெளிப்பாடாக வரையப்பட்டுள்ளன என்பது இரண்ட குகைகளில் தன் கலை விழுமியங்களை வெளிப்படுத்தியிருப்பதன் மூலம் புலனாகின்றது. மேலும் இவ் ஓவியங்கள ஆதிமனிதனின் கலை யுணர்வும் அதனோடு இணைந்த அவனது பொருளாதாரமும் பிரதிபலிக்கும் வகையில் இயற்கையில் கிடைத்த விலங்கு இரத்தம், விலங்குக் கொழுப்பு, பச்சிலைச்சாறுகள், மண், கண்ணாம்பு என்பவற்றின் மூலம் வரைந்துள்ளான்.

கற்காலத்துக்கு முற்பகுதியான பலியோலிதிக் (Paleoli-thic) காலத்தில் ஐரோப்பாவை நோக்கி வந்த நாகரிக மனிதன் நியண்டதலினால் ஆக்கப்பட்ட தந்த உருவங்களும், அவுஸ்திரேலிய கண்டத்தேசிய பூங்காவில் உள்ள கைவிரல் அடையாளங்களைக் கொண்ட குக ஓவியமும் குறிப்பிடத்தக்கன. இவை ஓவிய வளர்ச்சிப் படியை குறைந்தளவிலேயே கொண்டிருந்தன.

இதற்குப் பிற்பட்டகால மக்டலீன் (Magdalenian) காலத்து சுவரோவியங்கள் சைபீரிய ஆட்டிக் பிரதேசத்தை நோக்கி வருகை தந்த நாகரிக மனிதனால் ஆக்கப்பட்டனஸ் பெயினில் உள்ள அல்டாமீரா பிரான்சின் வெஸ்செல் பள்ளத்தாக்கில் உள்ள லாஸ்கோக்ஸ் (Lascaux) பிரான்சில் உள்ள சோவெற் குகை ஓவியங்கள் என்பன ஆதிமனிதனின் ஓவியத்திறனையும் அவனது அறிவுத்திறனையும் வெளிப்படுத்துகின்றன. இவற்றை விரிவாக நோக்கின்,

ஸ்பெயின் நாட்டின் உட்பாகத்தில் உள்ளஅல்டாமீரா குகையானது 1875 இல் மாசலினேடி சரவுத்தோலா என்பவராலே உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டது. இங்குள்ள ஓவியங்களில் உயிரோட்ட இயல்பும் ஒட்டம், அசைவு என்பனவும் வெளித்தெரிகின்றது. மேலும் இங்கு 18x9 மீற்றர் அளவில் பிரமாண்டமான வகையில் வரையப்பட்டுள்ள எருதின் உருவம் சிறப்பான வகையில் சிவப்பு, கறுப்பு, கபிலம், ஊதா போன்ற நிறங்களால் வரையப்பட்டுள்ளது. இவ் ஓவியங்களில் ஆண்பன்றிகள், பெண்மான், பனிமான், குதிரைகள் என்பன வரையப்பட்டுள்ளன.

ஓவியங்களின்உட்புறம் கபில நிறத்தாலும் சிகப்பு நிறத்தாலும் நிரப்பப்பட்டுகறுப்பு நிறத்தால் வெளிக்கோடிடப்பட்டு அழுத்திக்காட்டப்பட்டுள்ளது. சுவர்களில் தமது கைகளை வைத்துக் கொண்டு விலங்கு இரத்தத்தை வாயிலிட்டு பப்பாசிக்குழாய் போன்ற தாவர இலைத் தண்டுகளை பயன்படுத்தி சுவரில் அச்சுப்பதித்தலை ஊதுவதன் மூலம் வரைந்துள்ளான். இதன் மூலம் ஆதி மனிதனது ஓவியத்தின் திறனையும் அச்சுபதித்தல் முறையினையும் விளங்கிக் கொள்ள முடிகிறது:

பிரான்சின் வெஸ்செல் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள லாஸ்கோக்ஸ் (Las Caux) குகையில் மறைந்திருந்த ஓவிய பொக்கிசங்கள் 1946-ம் ஆண்டு ஒரு நாயைத்தேடிச் சென்ற நான்கு பையன்களால் கண்டறியப்பட்டு அதன் வாயிலாக ஆராய்ச்சிகளுக்குட்பட்டது. இங்கு வரையப்பட்டுள்ளவையும் பெரும்பகுதி விலங்குகளாகவே அமைந்தது. எருதுகளின் உருவம், குதிரை, மான், மரை போன்றன எதிரெதிரேயும் ஓர் ஒழுங்கற்ற முறையில் வரையப்பட்டுள்ளது. இவற்றுள் தனது முன்னங் கால்களில் வீழ்ந்து கிடக்கும் விலங்கின் கூன் விழுந்த முதுகில் பல ஈட்டிகள் குத்தியுள்ளதாக வரையப்பட்டுள்ளது. 20,000 ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்டதாக கருதப்படும் இவ் ஓவியம் ஆயுத பாவனையையும் கொண்டிருந்ததனை வெளிக்காட்டுகிறது நடமாடும் வேதாள உருவம் ஆற்றைக்கடந்து செல்லும் ஆடுகள் போன்ற 30 ஓவியங்கள் வரை இங்கு வரையப்பட்டுள்ளன.

பிரான்சின் சோவெற் குகையில் உள்ள பாயும் மானின் ஓவியத்தில் யதார்த்தவாதத் தன்மை (Realism) பின்பற்றப்பட்டுள்ளமையும் தெளிவாகிறது. பிரான்சில் உள்ள ஸ்பெயின் மக்களின் வாழ்வைச் சித்திரிக்கும் மக்கரோனி (Macaroni) குகை ஓவியத்தில் குறியீட்டு பாணிகளும் ''சிம்போலிசம்'' (Symbolism) பின்பற்றப்பட்டு வரையப்பட்டுள்ளமை ஆதி மனிதனின் ஆழ்ந்த ஓவிய அறிவையும் திறனையும்புலப்படுத்துகிறது. பனியுகத்தில் (சுமார்30,000ஆண்டுகளுக்கு முன்) ஆஸ்திரியாவில் கண்டெடுக்கப்பட்ட ஆதிமனிதர்களால்ஆக்கப்பட்ட சுண்ணக்கல்லாலான பருத்த பெண்ணின் உருவத்தில் உடற் கூற்றியல் (Anatomy) அம்சங்கள் மிகைப்படுத்தப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது.மேலும் மத்தியதரைக் கடற்பரப்பை ஆண்டிய பகுதிகளின் ஓவிய படைப்புக்களும்ஐரோப்பியபார்டெனா எனுமிடத்தில் உள்ளஎலும் பிலான கைபிடி, காட்டெருமை, பனிமான், குதிரை என்பனவும் சிற்பத்திறனுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வாறான பல்வேறுபட்ட இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட சிற்பங்கள், ஓவியங்கள் மூலம் ஆதிமனிதன்தான் வாழ்ந்த சமூகத்தில் இருந்த பொருட்களைக் கொண்டே தனது ஓவிய சிற்ப படைப்புக்களை ஆக்கியுள்ளான் என்பது வெளிப்படையாகிறது. விலங்குகள், விலங்கின் எலும்பு, தந்தங்கள் விலங்கு இரத்தம், மண், என்ற வகையில் தன் சூழலில் கிடைத்த இயற்கையையேஅவனதுமூலப்பொருளாகக் கொண்டு கைவிரல்களினாலும் தாவரத் தும்புகளாலும் ஓவியங்களை வரைந்துள்ளான் எனவே ஆதிமனிதனின் ஓவியபடைப்புகளே இன்றைய ஓவியத்துறையின் நுணுக்கங்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருந்தன என்பதில் ஐயமேதுமில்லை. ●

தளபதி பதவிக்கான போரும் தமுமாறும் ஜனாதிபதியும்

மலராகன்

இராணுவத் தலைமைப் பீடத்தில் தற்போது ஜெனரல்களிடையேயான மோதல்கள் கூர்மையடைந்து வருகிறது. இம்மோதலின் மத்தியிலும் இராணுவத்தலைமை மாறாது அப்படியே உள்ளது. இராணுவத்தளபதி பதவியை அடைய திட்டமிட்டுச்செயற்பட்டு வந்த பலருக்கு இராணுவத்தலைமை கைமாற்றப்படாமை பெரிய ஏமாற்றத்தைத் தந்துள்ளது. இந்தநிலையில் இத்தலைமைப் போட்டி சிறிலங்கா இராணுவத்தை எதிர்காலத்தில் எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பது பாதுகாப்புப் படையின் தகுதி நிலை அதிகாரிகளுக்கும் மற்றும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் பெரிய தலையிடியாக அமைந்துள்ளது.

தற்போது இராணுவத் தளபதியாக இருக்கும் மேஜர் ஜெனரல் ஜெரிடிகில்வா இவ்வருடம் மேமாதம் ஓய்வுபெற இருந்த போதும் ஜனாதிபதி சந்திரிகா செய்த சிபார்சை அடுத்து இவருக்கு மேலும் ஆறுமாதங்களுக்கு -அதாவது நவம்பர் மாதம் வரை சேவை நீடிப்பு வழங்கப்பட்டது. இந்த சேவை நீடிப்பு பாதுகாப்பு சபைக்கு அறிவிக்கப்படாமல் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டது. இதனால் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்தரத்வத்தை மற்றும் மேஜர் ஜெனரல் றொகான் தளுவத்த உட்பட பலருக்கு மனக்கசப்பு ஏற்பட்டுள்ளது.

இம்மனக்கசப்பைச்சீர்செய்வதற்கு பல வழிகளிலும் ஜனாதிபதியும் அவருக்கு மிகவும் நெருக்கமான சிலரும் முற்பட்டனர்; ஆனாலும் அது சீர் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. இது ஒரளவுக்காவது தீர்க்கப் படவேண்டும் என்பது சந்திரிகாவைப் பொறுத்து முக்கியமான விடயம். ஆனால் இராணுவத்தளபதி பதவி நீடிப்பு வழங்கப்படவேண்டும் என்ற விடயம் ஜனாதிபதி சந்திரிகாவினால் தவிர்க்கப்படமுடியாத ஒரு விடயமாகவும் இருந்தது. இந்த நேரத்தில் சிறிலங்காவின் சுதந்திர தினத்தில் வழங்கப்படும் கௌரவ பதவிகள் மூலம் இப்பிரச்சினையை தீர்க்க முயற்சி எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் வலிகாமம் பகுதியை கைப்பற்றுவதற்கான அரசியற் தலைமையை இராணுவத்தினருக்கு வழங்கினார் என்ற காரணத்தை மையமாகக் கொண்டு பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான கேணல் அநுருத்த ரத்வத்தைக்கு ஜெனரல் பதவி வழங்கப்பட்டது. இதன் மூலம் நீண்டகாலம் இவரிடம் இருந்த உளரீதியான தாழ்வுச் சிக்கல் கூட தீர்த்து வைக்கப்பட்டது எனலாம்.

அநுருத்த ரத்வத்தையின் பதவியுயர்வுபற்றிஅவர் திருப்திப்பட்ட போதும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் இராணுவ நடவடிக்கைக்குப் பொறுப்பதிகாரியாக இருந்து நிவிரச நடவடிக்கையில் முக்கிய பங்கேற்ற மேஜர் ஜெனரல் றொகான் தளுவத்தைக்கு இராணுவத் தளபதி பதவி எட்டாக் கனியாகப் போனமையானது அவருக்குப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் மூலம் பல பிரச்சினைகளுக்கு சிறிலங்கா படைத்தலைமை முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மேஜர் ஜெனரல் றொகான் தளுவத்தையின் திறமையை சோதிக்க கிழக்கு மாகாணத்தில் பல இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன; இந்த நடவடிக்கை கூட நினைத்ததைப் போன்று வெற்றியை ஈட்ட முடியவில்லை. இவ்வாறான சூழ் நிலையில் ஜனாதிபதியினால் இராணுவ தளபதிக்கு வழங்கிய பதவி நீடிப்பை மீள பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை இல்லாத நிலை ஏபபட்டுள்ளது எனலாம்.

பொதுஜன ஐக்கிய முன்னணிஅரசாங்கம் பதவி ஏற்ற காலத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் சில தலைவர்களினால் திட்டமிடப்பட்டதாகக்கூறப்படும் இராணுவச் சதி நடவடிக்கையை மிகவும் வெற்றிகரமாக முறியடித்ததன் மூலம் பொ. ஐ. மு.ஆட்சியை ஊன்றிக் கொள்வதற்கு வழி ஏற்படுத்தியவர்களில் முக்கியமானவர் இராணுவ தளபதி ஜெரி டி. சில்வா. அது மட்டுமன்றி அரசியல் ரீதியாகப் பலவீனம் அடைந்து ஆட்சி செய்துகொண்டு இருக்கும் வேளையில் - பொருட்களின் விலையேற்றம், பணவீக்கம் என்பவற்றால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுவந்த கசப்புணர்வு நிலவிவந்த நிலையில் இராணுவ நடவடிக்கைகள் தோல்வி மீது தோல்வியைச் சந்தித்து கொண்டு இருந்த சமயத்தில் இவற்றைச் சீர் செய்து சிங்கள மக்கள் மத்தியில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கு ''ரிவிரச'' என்ற இராணுவ நடவடிக்கை மூலம் வலிகாமத்தை பெற்று தந்தவர் ஜெரி டி. சில்வா என்ற கருத்தும் அரசாங்கத்தின் உயர் மட்டத்தில் உள்ளது; அத்துடன் இவர் இராணுவத் தளபதி மட்டும் அல்லாது பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஒரு முக்கியஸ்த்தராகவும் இருக்கின்றார். இந்த நிலையில் இவர் வெளியேற்றப்பட்டால் எதிர்வரும் காலங்களில் சந்திரிகா தனது அரசியல் நோக்கத்தினை அடைவதற்கு இராணுவ நடவடிக்கைகளைமேற்கொள்ளும் அளவுக்கு சொல்வதைக் கேட்டு அதன்படி செய்யக் கூடிய இராணுவத் தளபதி இன்னொருவர் கிடைப்பாரோ என்பது பெரியகேள்வியாகவுள்ளது. ஏனெனில் உள்ளூராட்சித் தேர்தல்களும் பல மாகாணசபை தேர்தல்களும் இவ்வருடத்தில் நவம்பர் மாதத்திற்கு முன்னர் நடத்த வேண்டியதேவை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை விரும்பியோ விரும்பாமலோ ஓர் சர்வஜன வாக்கெடுப்பு நடைபெற வேண்டிய ஆரம்ப நிலை சிறிலங்காவுக்கு இருக்கின்றது. இவற்றை எல்லாம் ஜெரிடி சில்வா இராணுவத் தளபதியாக இருக்கும்போதே மேற்கொள்ளவேண்டும் என்ற ரீதியில் இப்பதவி நீடிப்பு வழங்கப்பட்டது என எதிர்கட்சிகள் தெரிவிக்கின்றன. இதேவேளை ஜெரிடி சில்வா மேமாதத்துடன் ஓய்வுபெற்றால் அடுத்த இராணுவத் தளபதி பதவியை மேஜர் ஜெனரல் றொகான் தளுவத்தைக்குவழங்க வேண்டிவரும். அவ்வாறு வழங்கப்பட்டால் அடுத்த இரண்டு வருடங்களுக்கு இராணுவத் தளபதியாக இருக்க றொகான் தளுவத்தைக்கு வாய்ப்பு உண்டு. ஆனால் இவர் முன்னாள் இராணுவத் தளபதியான சிசில் வைத்தியரட்னாவுடன் நெருக்கமாகச் செயல்பட்டவர்.ஆகவே மீண்டும்சிசில்வைத்தியரட்னாவின் அணியினர் இராணுவத்தில் ஒன்று சேருவார்கள; இதன் மூலம் மீண்டும் சிசில் வைத்தியரட்னாவின் கை ஓங்கும் வாய்ப்பு உண்டு.எனவே ஆட்சிக்கும் ஆபத்துவரலாம். அவ்வாறு இல்லாவிடினும் இவர் பிரதி அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தையுடன் மிக நெருக்கமாகச் செயல்படுபவர்; ஆகவேஇராணுவத்தில் ரத்வத்தையின் கையோங்கும் நிலை ஏற்படும், இதனால் இவர்களின் விருப்பப்படியே இராணுவம் செயல்படும். இந்நிலையில் றொகான் தளுவத்தையை பாராட்ட மட்டும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

வரியும் போர் முனைகளால் தன்னும் சிறீலங்கா அரசு

இராணுவ குவிப்பில் இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களுடன் கொழும்பும் போட்டி போடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பு நிலைமைகளில் ஏற்பட்ட திடீர்திருப்பங்கள்வடக்குகிழக்குடன் கொழும்பு மாநகரிலும் இராணுவ பிரசன்னத்தை அதிகரிக்கும் நிலைக்கு அரசைத்தள்ளியுள்ளது. முன்னர் வடக்கு கிழக்கு பகுதிகள் மட்டுமே ''போர் முன்னரங்கு'' (War Front) என்ற பதத்தால் அழைக்கப்பட்டன. இந்தப் பட்டியலில் கொழும்பும் தற்போது இணைக்கப்பட்டிருக்கின்றது. இன்று கொழும்பும் ''போர் முன்னரங்கு'' என்ற பதத்தினால் கொழும்பு விமர்சகர்களால் அழைக்கப்படுகின்றது.

கொழும்பின் மத்தியில் ஜனவரி 31 ஆம் திகதி நடைபெற்ற பாரிய குண்டுத்தாக்குதல் இதனால் சிறிலங்காவின் பொருளாதார நிலையின் உறுதியற்ற தன்மை என்பன கொழும்பு நகரின் பாதுகாப்பை பொலிசாரிடமிருந்து இராணுவத்திற்கு மாற்றஅரசைநிர்ப்பந்தித்தது. இந்நிலையில் கொழும்பு நகரின் பாதுகாப்பிற்கு மேலதிக இராணுவத்தை போர் தீவிரமாக நடைபெறும் வடக்கிலிருந்தா கிழக்கிலிருந்தா அதிகளவில் எடுப்பது என்பதே சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் இன்று எழுந்துள்ள பிரச்சினை.

படை நகர்வுகள்

ஏற்கனவேகடந்த மாதம் கிழக்கின் மட்டக்களப்பு மாவட்டத்தில் ரிவிகிரண இராணுவ நடவடிக்கைக்காக கொழும்பிலிருந்து பெருமளவு படையினர் அனுப்பப்பட்டிருந்தனர். வடக்கில் 'ரிவிரச' இராணுவ நடவடிக்கைக்காக கிழக்கிலிருந்து பெருமளவு படையினர் கடந்த ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் யாழ்ப்பாணத்திற்கு நகர்த்தப்பட்டிருந்த நிலையில் தான் கொழும்பிலிருந்து மேலதிக படைகள் ரிவிகிரண நடவடிக்கைக்காக மட்டக்களப்பிற்கு கடந்த மாத ஆரம்பத்தில் அனுப்பப்பட்டிருந்தன. இந்த நிலையில் கொழும்பு நகருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள இவ்வேளையில் கிழக்கிற்கு அனுப்பப்பட்ட மேலதிக படையினரை கொழும்பிற்கு மீண்டும் அழைப்பது என்பது கிழக்கில் ஏற்கனவே பெருமளவு பகுதிகளை தம்வசம் எடுத்துள்ள விடுதலைப் புலிகளுக்கே வாய்ப்பாகிவிடும் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் ஒரு சாரார்எச்சரிக்கின்றனர்.

கிழக்கிலிருந்து வடக்கிற்கு அனுப்பப்பட்ட படையினரை மீண்டும் கிழக்கிற்கு எடுத்து அதன் மூலம் கிழக்கிற்கு கொழும்பிலிருந்து அனுப்பிய மேலதிக படைகளை கொழும்பிற்கு திருப்பி அழைத்துக் கொள்வதோ அல்லது வடக்கில் நிலை கொண்டுள்ள படையினரில் ஒரு பகுதியினரை கொழும்பின் பாதுகாப்பிற்காக எடுத்துக் கொள்வதோரிவிரச இராணுவ நடவடிக்கை மூலம் ஆக்கிரமித்த வலிகாமத்தை படையினர் இழந்து விடவே வழிசெய்யும் என மற்றுமொரு சாரார் எச்சரிக்கின்றனர். ரிவிரச படையினரை திருப்பி அழைப்பதை படை உயர் அதிகாரிகளே ஆட்சேபித்து வருகின்றனர்

இந்த எச்சரிப்புகளின் மத்தியில் அரசு தன் பாதுகாப்பு கருதியும் தனது தளமான கொழும்பு நகரின் பாதுகாப்பு கருதியும் கிழக்கிற்கு ரிவிகிரண நடவடிக்கைக்காக கொழும்பிலிருந்து அனுப்பிய மேலதிக படையினரில் ஒரு தொகுதியினரை அவசரமாக திருப்பியழைத்துள்ளது. இதன் மூலம் கிழக்கில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்ப வடக்கிலிருந்து ரிவிரச இராணுவ நடவடிக்கையில் பங்குபற்றிய ஒரு தொகுதி படையினர் கிழக்கிற்கு நகர்த்தப்பட்டுள்ளனர். இவ்வாறு வடக்கிலிருந்து கிழக்கிற்கு நகர்த்தப்பட்டுள்ள படையணிகளில் பிரிகேடியர் ஜனாகபெரேரா தலைமையிலான Reserve Strike Force எனும் விசேட நடவடிக்கை படையின் ஒரு தொகுதியினரும் அடங்குவர். இந்தப் படைப்பிரிவைக் கொண்டதே இராணுவத்தின் 53 ஆம் பிரிகேட் ஆகும். இது ரிவிரச நடவடிக்கையில் கோண்டாவிலிலிருந்து கொழும்புத்துறையூடாக யாழ்ப்பாண நகருக்கான இறுதிக்கட்ட நகர்வை மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் வலிகாமத்தில் தொடர்ந்து இருக்கவேண்டும் என்பதற்காக பிரிகேடியர் பி ஏ கருணாதிலக தலைமையிலான 51 ஆம் பிரிகேட்டும் பிரிகேடியர் நீல்டயஸ் தலைமையிலான 52 ஆம் பிரிகேட்டும் யாழ்ப்பாணத்திலேயே தங்கியுள்ளனர். படை அதிகாரிகளின் வற்புறுத்தலின் பேரிலேயே இந்த இரு பிரிகேட்டுகளையும் யாழ் குடாநாட்டில் தங்கவைக்க அரசு இணங்கியிருக்கின்றது. இவ்வாறு கொழும்பு நகருக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் வடக்கு கிழக்கு கொழும்பு என படையினரை சுற்றிச் சுற்றி நகர்த்தும் வேடிக்கை விளையாட்டுக்கே அரசை இட்டுச் சென்றுள்ளது.

வேறுபட்ட மூலோபாயம்

அன்று ஐ.தே.க. அரசின் போர் மூலோபாயம் வித்தியாசமானதாகவே இருந்தது. கிழக்கிலும், வடக்கில் வவுனியாவிலும் தன்பிடியை இறுக்கி நீண்ட கால பொருளாதார உளவியல் நெருக்கடிக்கு தமிழ் மக்களை உள்ளாக்கி தனது இராணுவ நடவடிக்கைகளை இப் பகுதிகளினுள்ளேயே மட்டுப்படுத்திக் கொண்டது. இதன் மூலம் ஐ.தே.க. அரசுதன் சுயபாதுகாப்பை உறுதி செய்வதற்கு முனைந்தது. ஐ.தே.கவின் இந்த போர் மூலோபாயம் நீண்ட காலத்திற்கு பின்பே வெற்றியா தோல்வியா என்ற பெறுபேற்றைக் காட்டக் கூடியது ஆனால் சந்திரிகாவின் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசோ இதற்கு மாறாக தன் போர்த் திட்டத்தை வகுத்தது. பெரும்பான்மை பலத்தை பாராளுமன்றத்தில் கொண்டிராதபொ. ஐ. மு. அரசுக்கு வடக்கு கிழக்கு போரில் உடனடி வெற்றியை காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. அரசியல் ரீதியாக தனது எதிர்காலத்தை பலமாக்க சந்திரிகா அரசிற்கு இது முக்கியமானதாக இருந்தது. இதன் உந்துதலே ரிவிரச இராணுவ நடவடிக்கையும் அதன் மூலம் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்ததுமாகும். புலிகளின் இதயத்தையே தாக்கிவிட்டதாக ரிவிரச இராணுவ நடவடிக்கையின் முடிவில் பிரதிபாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த பெருமைப்பட்டுக்கொண்டார். ஆனால் இந்த பெருமை கடந்த ஜனவரி 31ஆம் திகதி சிறிலங்காவின் இதயப் பகுதியும் நிதி மையமுமான கொழும்பு கோட்டையில் இடம் பெற்ற குண்டு வெடிப்புடன் தவிடு பொடியானது.

கொழும்பே முக்கியம்

இந்த குண்டுவெடிப்பு கொழும்பின் ஒரு பொது இடத்தில் நடைபெற்று அதில் அரசிற்கு பெரியளவில் தாக்கம் ஏற்படாதுவிட்டிருந்தால் ஜனாதிபதி சந்திரிகா ஆழ்ந்த அனுதாபமும் அதிர்ச்சியும் வேதனையும் தெரிவித்து ஒரு அறிக்கையோடு நின்றுவிட்டிருப்பார்.

ஆனால் குண்டு கொழும்பின் அதிகூடிய பாதுகாப்பான இடத்தில் வெடித்தமையும் இந்தியாவின் சோதிடரான பார்த்தசாரதியின் ஏழரைச்சனி எச்சரிப்பும் ஜனாதிபதி சந்திரிகாவை ஒரேயடியாக நிமிர்ந்து உட்கார வைத்தது. அவரின் சொந்த பாதுகாப்பு நலனில் ஏற்பட்ட அக்கறையே கொழும்பு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டமைக்கு காரணமாகும். கொழும்பில் படைகளை குவிப்பது வடக்கு கிழக்கு நிலைமையை கைமீறி செல்ல வழிவகுக்கும் என படை அதிகாரிகளின் எச்சரிப்பும் ஜனாதிபதிக்கு இரண்டாந்தர விடயமாகவேபடுகின்றது. மூன்று துவாரங்கள் கொண்ட ஓர் படகின் ஓட்டியிடம்; இவற்றில் ஏதாவது ஒரு துவாரத்தை அடைக்கவே கையில் அடைப்பான் உள்ளது. ஓட்டியினால் படகை நிச்சயமாக காப்பாற்ற முடியாது. இதுவே சந்திரிகா அரசின் இன்றைய நிலை.

●

ஒரு சஞ்சிகையின் அஸ்தனம்

அந்தப் பல்துறைக் கலைஞரின் இறுதிக் காலம் படுக்கையில் கழிந்தது. பகலிலும்-இரவிலிலும்-உண்ணும் போதும்-பேசும்போதும் படுக்கையையே தனது வாழ் விடமாக்கிக்கொண்டார் அவர்.

படுக்கையில் அசையாமல்-கிடந்து ஒவ்வொரு வார்த்தையாக அவர் உதடுகள் உச்சரித்தன. அருகில் சோகத்தை புதைத்து வைத்துக்கொண்டு உதவியாளர் எழுதிக்கொண்டிருப்பார். அவை - 'பறந்து போன பக்கங்களாக' - 'மாத பலனாக' தமிழ் வாசகர் உலகத்தை வலம் வந்து கொண்டிருந்தன.

இப்போது - அந்த சஞ்சிகை மரம் சரிந்துவிட்டது. இலைகளை இழந்து-பூக்களை இழந்து - பட்டுப்போய் விட்டது.

● ●

இதழியலில் - தமிழ் - இலக்கிய இதழ்களின் பிறப்பை இரண்டாக வகுக்கலாம். ஒன்று-தமிழ்நாட்டில்முளைத்தவை- இரண்டாவது - ஈழத்தில் முளைத்தவை;

ஈழத்தில்-

ஈழகேசரி, மறுமலர்ச்சி - இந்த இரண்டு இதழ்களின் காலத்திற்குப் பின்னர்-சிறிது காலம் - ஒரு தொய்வு நிலை பிறகு - சிற்பியின் - கலைச் செல்வி வெளிவந்தது.

இந்த நூற்றாண்டின் நடுப் பகுதிவரை இந்த நிலையே தொடர்ந்தது. 50களின் பின்னர்- சித்தாந்தங்களின் மோதல்கள்வேர் கொண்டு வளர்ந்ததால் - பல்வேறு கருத்துடைக்குழுக்களின் கலை இலக்கிய கொள்கைப் பிரகடனங்களாக பல சஞ்சிகைகள்பிறப்பெடுத்தன. இதே சமயம்-இவை தரமற்றவையாகஅமையாமல்-மிக காத்திரம்கொண்டவையாக வாழ்வின் அடித்தளசிக்கல்களை-சித்திரிப்பனவாக அமைந்தன. இது ஈழத்து இதழியலுக்கு பெருமை தேடித்தந்த விஷயம்.

சித்தாந்தங்களின் ஆக்கிரமிப்பு-ஈழத்தில் விலக்கிக் கொள்ளப்பட்ட விடயமாக இன்றுகூட இருக்கவில்லை. மல்லிகை-தாயகம் போன்ற தரமான சஞ்சிகைகள்கூடஒரு சித்தாந்தத்திற்கு - 'இஸத்-திற்கு' தம்மை ஆட்படுத்திக் கொண்டு இலக்கைக் காக்கும் பணியிலிருந்து விலகிக்கொள்ளவில்லை;

ஈழத்தில் - சஞ்சிகைகள் சாவடைந்தமாதிரி - தமிழகத்திலும் சஞ்சிகைகளின் சாவு பல நூற்றுக்கணக்கில் இடம் பெற்றன - இடம் பெறுகின்றன.

ஈழத்தைப் போலவே-தமிழகத்திலும் காலத்திற்கு காலம் ஆர்வமுள்ள - வேகமுள்ள-இளைஞர்கள்-தம் இலக்கியப் பசியை-வாழ்வின் கீழ்மைத் தன்மைக்கு எதிரான கோபாவேசத்தை வெளிப்படுத்துவதற்காக பல இலக்கிய இதழ்களை ஆரம்பித்தனர்.



இளரத்தம் நாளடைவில் வற்றியது. தனித்துவமான சஞ்சிகைகள் - பிறப்பெடுத்து-ஒரு வயது - இரண்டு வயது கழியமுன்னர் தமது உயிர்ச் சொட்டை முற்றாக வடித்துக்கொண்டன.

மணிக்கொடி, சரஸ்வதி, எழுத்து என பல நூற்றுக்கணக்கான சஞ்சிகைகள் வரலாற்றில் மட்டும் தமது பெயரை ஆழமாக பதித்து விட்டு மாயமாய் மறைந்து விட்டன;

தமிழகத்தில்-ஆனந்த விகடன் வைர விழா கொண்டாடுவதும் - குமுதம் பல ஆண்டுகள் வாழ்ந்து பல இலட்சம் பிரதி அச்சடிப்பதும் சினிமா-அரசியல் வர்த்தக கவர்ச்சி மாயமுகங்களின் வாழ்த்தொலியினால்தான்.

கனமான - காத்திரமிக்க கலையழகு கொண்ட- கவித்துவ இதழ்கள் வளர்ந்து வருவதற்கு தமிழ் சமூகம் வசதியோ - வாய்ப்போ வழங்கவில்லை இது மிகவும் சோகமான உண்மை.

இதனால்தான் இன்று கூட இலக்கியதாகம் கொண்டவர்களால் வெளியிடப்படும் சிற்றிதழ்கள் முறைக்கு மூன்று மாதத்திற்குள் கருகும் அவலம் உள்ளது.

● ●

இவ்வாறானதொரு கால கட்டத்தில் இப்படியான ஒரு தேசத்திலிருந்துதான் சுபமங்களா வெளிவந்தது. ஸ்ரீராம் 'சிட்பண்ட' என்ற ஒருபாரிய நிதி நிறுவனமே இதை வெளியிட்டது. இது ஒரு முரண் நிலை.

எல்லாத் தரப்பினரையும் திருப்திப்படுத்தக் கூடியதாக-கலை - இலக்கிய பெறுமானமும்-பல்துறை விடயங்களும் கொண்டு-இதழியலின் சகல பரிமாணங்களையும் ஓரளவிற்கேனும் வெளிப்படுத்தக் கூடிய முறையில் சுபமங்களா வெளிவந்தது.

முன்னர் - சினிமா தன்மை அப்பிய சஞ்சிகையாக-அனுராதா ரமணனை ஆசிரியராகக் கொண்டு இது வெளிவந்தது. கடந்த ஐந்துஆண்டுகளாக கோமல் சுவாமிநாதனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது; இதில் வேதனையான விஷயம் என்னவெனில் - அதன் ஆசிரியரின் சாவுடன் அச்சஞ்சிகையின் ஆயுளும் முடிந்துவிட்டமையே;

சிலமாதங்களுக்கு முன்னர் மரணமெய்திய கோமல்-சுபமங்களாவை தரமாகக்கொண்டு வருவதில் முனைப்பாக இருந்தார். இந்தவகையில் சுபமங்களாவை சிறப்பான சஞ்சிகையாகத் தந்துவிட்டு கண்ணை மூடிவிட்டார்;

''என் இலக்கியமே அரசியல்தான்'' என அச்சப்படாமல் சொன்னவர் இந்தக் கோமல்; இவர் இறக்கும் வரையும் எழுதிக்கொண்டே இருந்தவர். ஒரு வணிகச்சஞ்சிகையாளன் வாழ்வின் கடைசித்துளிவரை எழுதிக்கொண்டிருக்க மாட்டான்;

புற்றுநோயினால் இவர் உருகி உருகி உயிர் விட்டுக் கொண்டிருந்த சமயம்-இலக்கிய-சினிமா-நாடக உலகங்களைச் சேர்ந்த நண்பர்கள் கூட்டம் இவரின் இருப்பிடத்தில் குவிந்துகொண்டேயிருந்தது.

பிராமணாதிக்கம் இந்தியாவின் பத்திரிகை உலகத்தை

(7ஆம் பக்கம் பார்க்க

கலைத்துவமிக்க
நகைகளின் கருவூலம்

லலிதா ஜுவல்லரி

213 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

● தற்போதைய முகவரி
239 கண்டிவீதி
(அரசினர் வைத்தியசாலை அருகில்)
சாவகச்சேரி

☐ துல்லிய பார்வைக்கும் ...
☐ துலக்கமான பற்களுக்கும் ...

நன்மதிப்பு பெற்ற கண்ணாடி வழங்குபவர்
பல் கட்டுபவர்

பி. ஜெ. பர்னாண்டோ
கண்டி றோட்,
(தெய்வேந்திரா தியேட்டர் முன்பாக)
சாவகச்சேரி.

புன்னகையை வெல்லும்
பொன் நகைகளின் —
புகலிடம்...

அசோகா நகை அகம்

4 நவீன சந்தை
(மேல்மாடி - உட்புறம்)
சாவகச்சேரி

உங்கள் அபிமான அறிவரங்கம்

● கல்வி,
கலை,
கலாசார,
அறிவியல்
நூல்களின் தேர்வுக்கும்
பாடசாலை உபகரணங்களுக்கும்

பூபாலசிங்கம்
பொத்தகநிலையம்

யாழ்ப்பாணம்

● தற்போதைய முகவரி
இல: 8, நவீன சந்தை (மேல்மாடி)
சாவகச்சேரி

எழில் கொஞ்சும்

தங்க - வைர நகைகளின்
உறைவிடம்

இந்திரன் ஜுவல்லர்ஸ்

10 நவீன சந்தை
சாவகச்சேரி

இந்திரன் நகைமாடம்
10 சிறப்பு அங்காடி
சாவகச்சேரி

☐ தொல்லையற்ற பார்வைக்கும்,
☐ முல்லைப்பூ முறுவலுக்கும், ...

பிரபல்யம் மிக்க
கண்ணாடி வழங்குபவர்
பல் கட்டுபவர்

பி. ஐ. பர்ணாண்டோ
170 கண்டி வீதி
சாவகச்சேரி.

நல் வாழ்த்துகளுடன்

ஸ்ரீ விக்னேஸ்வரா
களஞ்சியம்

148, கண்டி வீதி - சாவகச்சேரி

உங்கள் பார்வை
புதிய கண்ணோட்டம் பெற...

● கண்களை நவீன முறையில் பரிசோதித்து
கண்ணாடிகள் வழங்குபவர்கள்

றெனி மூக்குக் கண்ணாடி அகம்
(Renny Opticians)

● 288 நாவலர் வீதி (யாழ் தனியார் வைத்தியசாலை முன்பாக)
ஆனைப்பந்தி - யாழ்ப்பாணம்

● கண்டி வீதி (யோகா மருந்தகம்)
சாவகச்சேரி

7-ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும்
மக்களின் இதயநாதமான
ஈழநாதத்திற்கு எமது நல்
தமிழீழ

சிங்களச் சிவில் நிர்வாகம்

வடக்கில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்திவிட முனைந்த சிறிலங்கா அரசு இன்று தனது தலைநகரான கொழும்பில் கூட அதனைச் சீராக நடத்த முடியாதளவிற்குக் குழம்பிப் போயுள்ளது.

வடக்கு நீண்ட பலவருடங்களாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலே இருந்து வந்தது. கடந்த வருட இறுதியில்அதன் பிரதான பகுதியமாக விளங்கிய யாழ்ப்பாணத்தை கைப்பற்றி அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தப் போவதாக ஆட்சியாளர்கள் அடிக்கடி கூறி வந்ததுடன் ஓர் இராணுவ நடவடிக்கையையும் மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசம் சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டது. இதன் மூலம் வலிகாமத்தில் விடுதலைப் புலிகளால் சிறப்பாக நடத்தப்பட்டுவந்த சிவில் நிர்வாகத்தை சிறிலங்கா அரசு சீர்குலைக்க முயன்றதே தவிர: அங்கு தனது நிர்வாகத்தைஏற்படுத்த முடியாது தவிக்கின்றது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வலிகாமம் இருந்தபோது ஆங்காங்கே பாரிய தாக்குதல்கள் நடைபெற்ற போதிலும் அரசினால் சிவில் நிர்வாகத்தைக் குழப்ப முடியவில்லை. பாடசாலைகள், பல்கலைக்கழகம் இயங்கின: வங்கிகள், செயலகங்கள் தொழிற்பட்டன: காவல் பணிமனைகள் நீதிமன்றுக்கள் சட்டத்தை நிலை நாட்டிக் கொண்டிருந்தன: போக்குவரத்து மற்றும்வைத்திய சேவைகள் கூட தடையின்றித் தொடர்ந்தன.

இவற்றைக் கண்டு அச்சமடைந்த அரசு அவற்றைக் குழப்பியடித்து அங்கு தமது சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்த எடுத்த முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன. வலிகாமம் கைப்பற்றப்பட்டது. ஆனால் அங்குசிவில் நிர்வாகத்தை நடத்த எவருமே இருக்க வில்லை:

எனினும் ஆட்சியாளர்கள் தமது தொடர்பு சாதனங்களூடாகத் தினமும் தம்மால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் படிப்படியாக சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி வருவதாகத் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டுவருகின்றனர்.

''வைத்திய சாலையை இயக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகின்றது. பாடசாலைகள் ஆரம்பிக்கதளபாடங்களும் பாடசாலை உபகரணங்களும் அனுப்பப்படுகின்றன. பல பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. போக்குவரத்திற்கென இறக்குமதி செய்யப்பட்ட புதிய பஸ்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன'' என்றெல்லாம் கூறி வாயால் மட்டும் தனது சிவில் நிர்வாகத்தை சந்திரிகா அரசு நடத்திக் கொண்டிருக்கின்றது.

ஆனால்தெற்கில்இதுவரை காலமும்நடத்தப்பட்டு வந்த சிவில் நிர்வாகம் இன்று ஆட்டம் காணத் தொடங்கி விட்டது. சிறிலங்காவின் பொருளாதார மற்றும் நிர்வாக மையமாக விளங்கிய ஜனாதிபதி மாவத்தையில் நடந்த குண்டுத்தாக்குதலை அடுத்து இலங்கை முழுவதிலும் தனது சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த முனைந்த சிங்கள ஆட்சியாளர்கள் தமது தலைநகரான கொழும்பில் கூட அதனைச் சீராக நடத்த முடியாது தடம்புரளத் தொடங்கிவிட்டனர்.

அங்கு அரச இயந்திரம் செயலிழக்கத் தொடங்கிவிட்டது. பாடசாலைகளுக்கு பாதுகாப்பு கொடுக்குமாறு பெற்றோரும் ஆசிரிய மாணவர்களும் அரசை வற்புறுத்தினர். இதனால் பிரபல பாடசாலைகள் முன்பாகச் செல்லும் பிரதான வீதிகளை அரசு மூடியது. அதுவும் பாதுகாப்பற்றது என தெரிவித்த பல பெற்றோர் தமது பிள்ளைகளைபாடசாலைகளுக்கு அனுப்ப மறுத்து விட்டனர். இந்நிலையில் அரசு பாடசாலைகளைக் காலவரையறையின்றியே மூடிவிட்டது.

நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸார் அகற்றப்பட்டு கொழும்பு நகரின் பாதுகாப்பு முற்றாக இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது. இதன் மூலம் தலை நகரின் சிவில் நிர்வாகத்தை இராணுவம் சீராக்கும் என ஆட்சியாளர்கள் கனவுகாண்கின்றனர்.

கொழும்பின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே அவர்களின் முக்கிய கடமையாக இருக்கப்போகின்றது: இதற்காக தலைநகரின் சகல இடங்களிலும் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் வீதித்தடைகளைப் போட்டு இருபத்தி நான்கு மணி நேரமும் தீவிர சோதனைகளை மேற்கொள்ளப் போகின்றனர். சகலவாகனங்களும் மறிக்கப்பட்டு சோதனையிடப்படும். பொதுமக்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படப்போகின்றனர். இவர்களின் தேசிய அடையாள அட்டைகளும் தொழில் நிலைய அட்டைகளும் பெறப்பட்டு உறுதிப்படுத்தப்படப் போகின்றன. இவர்களது பொதிகளும் கூட சோதிக்கப்படப் போகின்றன. இரவுபகலாகத் தேடுதல் வேட்டைகள் நடைபெறப் போகின்றது. சந்தேகத்திற்கிடமானவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்படப்போகின்றனர்.

படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் கொழும்பில் மக்களின் இயல்பு வாழ்க்கையை பெரிதும் பாதிக்கும் என்பதுவெளிப்படை. தொழிலாளர்கள் நேரத்துக்கு தமது தொழில் நிலையங்களுக்குச் செல்லமுடியாது.

நோயாளர்கள் வைத்திய சாலைகளுக்கு செல்ல முடியாது. போக்குவரத்துக்களைச் சீராக நடத்த முடியாது. இதனால் உற்பத்தி நிலையங்களில் உற்பத்திகள் பெரிதும் பாதிப்படையப் போவதுடன் வீழ்ச்சியடையப் போகின்றன.

எந்தவேளையிலும் எதுவும் நடக்கலாம் என்ற அச்ச உணர்வு மக்கள் மத்தியில் ஆழப்பதிந்து விட்டது. அதனாலேயே இன்று வதந்திகள் காட்டுத் தீ போல் பரவிக் கொண்டிருக்கின்றன. வதந்திகளை வதந்தி என நிரூபிப்பதிலேயே அரசின் பெரும் பகுதி நேரம் செலவிடப்படுகின்றது.

அரச உத்தியோகத்தர்கள் பலர் தமது பதவிகளை ராஜினாமாச்செய்து வருகின்றனர். இன்னும் சிலர் தொடர் விடுப்பில் உள்ளனர். பெரும்பாலானவர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறுவதே கிடையாது.

நாட்டின் ஜனாதிபதிக்கே பாதுகாப்புக்கொடுக்க முடியாத பாதுகாப்புப்படையினர் நகருக்கு எப்படி பாதுகாப்புக் கொடுக்கப் போகின்றனர் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

''போதியளவு வெடிமருந்துகள் கொழும்பிற்குள் கொண்டுவரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டுள்ளன. தாக்குதல் நடத்துபவர்கள் பாடசாலைகள், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்கள் அரச கட்டடங்கள் மீது பாரியதாக்குதல்களை நடாத்தத் திட்டமிட்டுள்ளனர்:

வெடிமருந்துகள் பொருத்தப்பட்டு தாக்குதல் நடத்தத் தயாரான நிலையில் பல வாகனங்கள் கொழும்பில் நடமாடிக்கொண்டிருக்கின்றன'' என அரசே தனது மக்களை அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது: இவ்வாறு அறிவித்துக் கொண்டிருப்பதன் மூலம் மக்களை ஏமாற்றிவிட்டு இராணுவத்தைப் பெருமளவில் குவித்து நகரின் பாதுகாப்பு என்ற போர்வையில் அரசு தம்மையும் தமது உடமைகளையும் பாதுகாத்திட திட்டமிட்டுள்ளது: அரசபடைகளின் கெடுபிடிகளினால் மக்கள் ஆதிதிரம் கொள்ளாதிருப்பதற்காக மக்களாகிய உங்களின் பாதுகாப்பிற்காகவே படையினர் இவ்வாறு நடந்துகொள்கின்றனர் என அரசு அதற்கு நியாயம் கற்பிக்கப்போகின்றது.

எனவே வலிகாமத்திற்குள் இராணுவத்தினரை அனுப்பி அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தப்போவதாக கூறிய அரசு அங்கு இருந்த சிவில் நிர்வாகத்தையும் கெடுத்தது போல இன்று கொழும்பில் இராணுவத்தை இறக்கியதன் மூலம் கொழும்பு நகர மக்களின் இயல்பு வாழ்க்கையையும் சீரழிக்கப்போகின்றது. என்பது மட்டும் உறுதி.

ஒரு சஞ்சிகையின் அஸ்தமனம்

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்டிவைத்துக் கொண்டிருக்கும் பொழுதில் கருத்துக்களின் குரலாக - அடக்கப்பட்டோரின் சிக்கல்களை சுமந்து சுபமங்களா வெளிவந்தமை நிஜம்.

சுபமங்களா ஈழத்து படைப்புகளுக்கு களம் வழங்கியது. 94 ஏப்ரலில் யாழ்ப்பாணம் வந்த கோமல் சுவாமிநாதன் ''இங்குபோலியானகலைஇலக்கியங்கள் தோன்றவில்லை. வாழ்வு மாயையாகத் தெரியவில்லை. வாழ்க்கையின் யதார்த்தத்தைக் சந்திக்கின்றோம்'' என்றார்.

சீரழிந்துவரும் தமிழ் இதழியல்-கலாசாரசீரழிவிற்குமுகம் கொடுத்து- விழுதிறக்கிவைர அவாக் கொண்ட சஞ்சிகை நின்றுவிட்டது-

ஆனாலும்- சமகாலத்தின் பதிவை புதிய உத்வேகத்துடன் தந்த சஞ்சிகை வெளிவராமல் போனதில் துக்கம் தவிர்க்கப்பட முடியவில்லை.

ஒரு முனைப்பான-தரமான இதழியலாளனின் சாவுடன் அவன் நடத்திய இதழும் நின்றுவிட்டது என்ற செய்தி- கோமல் தான்- சுபமங்களா என்ற உண்மையை உலகத்திற்கு உணர்த்திநிற்கின்றது: அத்துடன் நின்று விட்ட சஞ்சிகை மீதும்- அதன் ஆசிரியர் மீதும் பல மடங்கு மதிப்பையும் ஏற்படுத்துகின்றது.

குறளிக் குஞ்சொன்று...

செ. பொ. சிவநேசு

மார் நிமிர்த்தி கொப்பெறிந்து
விலாசங் காட்டுது பார்
அரச மரமொன்று!
கிளை படர்த்தி இலை உதறி
ஆலென
அழகு காட்டப் பார்க்குது பார்!

பிடியெடா பிடியென்று பிடித்திருந்தும்
கொப்பிழந்து
மாயப் பேய்கள் மண்ணில் வீழ்ந்துபட
நேற்றைக்குப் புதிதாய்
அமைதியை அலறி அலறி
அரசேறி நிற்குது பார்
குறளிக் குஞ்சொன்று!

கிளையெல்லாம் காலெறிந்து
சிலிர்த்துச்சிறகடித்து
ஆணவக் குதிகுதித்துக் கிறீச்சிடுதே
கேட்டாயல்லோ?!

தலைகீழாய்ப் பறக்குது
கொதிநீரில் நீந்துகுது
எல்லா வித்தையுமே காட்டுகுதே
கடைசியிலே பார்த்தால்
எல்லாமே மாயையல்லோ?!
குறளியல்லோ!
எல்லாமே மாயையல்லோ?!
கண்டாயல்லோ?!

சுருக்கிட்டு கழுவேற்றி
கொலை செய்து போட்டு
செத்த சவத்தைத் தூக்கியல்லோ
சமாதானம் என்கிறது?!
மணிக்கூட்டு முள்ளின்
ஒவ்வொரு சிறு நகர்விற்கும்
சத்தற்ற சத்தங்களால் உதிர்ப்பதுகள்
பொருளற்ற சொற்களல்லோ?!

இனியுந்தான் நம்புதற்கோ?!

நம்பிக்கை என்கிற நாலு சில்லில்தான்
நகர்வது நம் வாழ்வு
ஆனாலது எங்களது தேரில்தான்
அரசமர வேரிலல்ல
புரியுமல்லோ?

சிங்களமா?
சகோதரம்தான் எங்களுக்கு!
மறுப்பேது?
கொதியேது? பொறாமையேது?
வாழட்டும் வாழ்த்துவோம்
ஆனாலோ
கல்மீது விதை விழுந்து
மண் தோன்றி
மூடி
முளை முளைத்து
வேர் பரந்து தமிழ்வாழ்ந்தநிலமெல்லாம்
அரித்தரித்துக் கொழுக்கிறதே
சிதையேற்றாமல் விட்டுவைப்பதற்கோ
சிங்களத்துவம்?!

தமிழீழ
தாயாளின் தேகமெல்லாம் கொட்டி
னாளே
போர் நெருப்பை!
கெட்ட போரின் கரமொடிக்க
போர் செய்வோம்!

அந்தா பார்...
இளசுகளோடு பழசுகளுமாய்
வீர விழுதுவிட்டு விரைகின்றார்மனிதர்!
எம் தோள்கள் மட்டுமென்ன
விழலுக்குள் சுருள்வதற்கோ?!
கோடரி சுமப்போம்
வா
பின்தொடர்வோம்!
ஆணிவேருடன் அரசு பிடுங்கி
வேகு நெருப்பில் வீசுவோம்!
சாம்பல் மேடேறி
கதிர் வீசிக் கை வீசி
விடிவு தலையேற்றி வருவான்
எம் கதிரவன்!

சிறுகதை

நிர்ச்சனை மற்ற மனம் போல எல்லையற்று விரிந்த வானம் வெறிச்சோடிக் கிடந்தது. சிலவேளைகளில் அர்த்த ரூபமாகவும் பல வேளைகளில் அரூபமாகவும் இடை வெளிகளில் அருவுருவமாகவும், வாழ்வின் நிகழ்வுகள் போல் அலைந்தலைந்து கோலம் காட்டும் முகில்கள் புலம்பெயர்ந்து விட்டன போலும்.

நிலைகுத்திய பார்வையின் விழுங்கலுள் அடங்கியவை யாவும் நினைவுகள் உறைவன வாக அன்றி, நிச்சயமற்ற வாழ்வின் அழியும் சுவடுகளாகி

எல்லாமே நிழற்கோடுகளாகவும் கனவுக் கோலங்களாகவும் மாறி மறையும் யதார்த்தமே இன்றைய வாழ்வாகி...

கொட்டிலின் முன்னே குந்தியிருந்து எவ்வளவு நேரம் தான் இப்பிடி நோக்கற்று, சிந்தனை நகர்வுகளின் பின்னே ஓட முடியும்?

சூழலின் - நிகழ்வுகளின் அழுத்தங்கள் மனதையும், உடலையும் ஒரேசமயத்தில் செயலற்றதாக்குகையில்

இருப்பு ஸ்திரமற்றுப் போனதன் விளைவாக ஏற்பட்ட இழப்புகள் பற்றிய அழுத்தமான சோகங்கள் ஆதிமாவையே ஜடமாக்குகையில் எல்லாமே ஒரு மாயை தான் என்கிற உணர்வு மேலெழுந்து, வாழ்வு பற்றிய அர்த்தமற்ற அர்த்தத்தின் புரிந்துணர்வின் வெளிப்பாடாகக் கிளம்பும் பெருமூச்சு அவனது ஆழ்மனதின் அப்போதைய உணர்வை துல்லியமாக்கும்.

''சே எவ்வளவு நாளுக்கு எதிதனை காலத்திற்கு இப்பிடி அலையிறது ஒவ்வொரு ஊராய் ஒவ்வொரு இடமாய் ஓவ்வொரு மூலையாய் ஓடிஓடி... ஒழிந்து ஒழிந்து - ஒதுங்கி ஒதுங்கி... நரக வாழ்க்கை எது வரைக்குமோ எண்டைக்கு முடியப்போகுதோ ?''

பார்வை நிலை குத்திய - எதிர்வெளிப் பனங்கூடலுள்- அவனைப்போல் அனைத்தையும் இழந்து மொட்டையாகி நின்ற அந்தப் பனை மரத்துப் பொந்தினுள் கூடு வைத்துள்ள கிளியினதும் குஞ்சுகளினதும் ஆரவாரமும் குதூகலமும் நிறைந்த வாழ்வியக்கமும் ஒலிகளும் அவனுள் லேசாக ஏற்படுத்தும் சலனத்தில் அவனையும் மீறி உதடுகள் பிரிந்து

'சீ... மனிசனாய்ப் பிறந்து என்னத்தைக் கண்டம்'

மீண்டும் நெடுமூச்சு.

□

நிவாரணமாகக் கிடைத்த கோதுமை மாவினுள் எப்படியோ வந்து மொய்த்துவிட்ட நுள்ளான் எறும்புகளை எரிச்சலுடன் திட்டியபடி அரித்துக் கொட்டிவிட்டு, காலைச் சாப்பாட்டிற்கு 'ஏதாவது செய்ய வேண்டும்' என்ற முனைப்பு உந்த, 'என்ன செய்யலாம்' என நினைத்தபடி நிமிர்ந்தவளின் பார்வையில் இன்னமும் - இவ்வளவு நேரமும் - அவன் அப்படியே கொட்டிலின் முன்னே குந்தியிருப்பது பட, அவள் அவனை நோக்கி நகர்ந்தாள்.

''என்னத்துக்கு இப்பிடி யோசிச்சுக் கொண்டிருக்கிறியள்... கொண்டந்து வைச்ச தேத்தண்ணியைக் கூட குடிக்காமல்...''

''... ...''

''என்னப்பா உங்களைத்தான் ஏனிப்பிடி மனசை விடுறியள்... இப்ப என்ன நடந்திட்டுது ?''

அவன் திரும்பி அவளைப் பார்த்தான்.

அவனருகே வந்து இருந்தவள், அவனது தலைமயிரை மெல்லக் கோதிவிட்டபடி கேட்டாள்...

''இப்பிடி யோசிச்சு என்ன நடக்கப் போகுது - எழும்புங்கோ போய் முகத்தைக் கழுவிட்டு வாங்க புட்டவிக்கிறன் சாப்பிடலாம்''

எண்ண ஓட்டங்கள் யதார்த்தத்தை விட்டு விலகியே செல்கின்றன:

அவன் இயல்புக்கு வந்தான் - நெடுமூச்சுடன் எண்ணங்கள் விடைபெற்றன.

''குட்டான் எங்கை?'' அவன் கேட்டான்.

''அவள் உங்கடை அப்பாவோடை வளவுப் பக்கம் போட்டாள்.''

அவன் எழுந்தான்.

மொட்டைப்பனைப் பொந்திலிருந்து ஒரு கிளி வீருட்டென காற்றைக் கிழித்துப் பறந்தது.

□

நீர்க் கேணிப் பக்கமாக நடக்கையில் நினைத்தான்.

'இவளால் எப்படி இயல்பாக வாழ்வை எதிர்கொள்ள முடிகிறது. இழப்பின் தாக்கங்களை ஜீரணிக்க முடிகிறது இவளை விட நான் பலவீனனா ?'

கேணியில் நீரள்ளி முகங் கழுவி நிமிர்கையில் கிழக்குப்

''கொக்குவில் மேற்கு...'

''அப்பிடியே.. நானும் முந்தி அங்கை ஞானபண்டிதாவிலை படிப்பிச்சனான் இப்ப பென்சன்...''

இவன் சிரித்தான் .. மேலே சுய அறிமுகம் தேவையற்றதாக அவனுக்குப்பட்டது. அவர் அதை எதிர்பார்த்திருக்கலாம். இவனதுமௌனமே இவனின் சங்கடத்தை அவருக்கு உணர்த்தியுமிருக்கலாம். அவரேதொடர்ந்தார்.

''எல்லாத்தையும் ஒரே நாள்ளை விட்டிட்டு வந்தாச்சு... எல்லாம் காலம்தான்... எத்தனை நாளைக்கு... உறவெண்டாலும்... அடுத்தவற்றை வீட்டிலை ஒதுங்கிக் கிடக்கிறது... வெறும் வெளியெண்டாலும் நமக்கென்று சுதந்திரமாக சரிய ஒரு இடம் வேணும்... இல்லாட்டி என்ன வாழ்க்கை... அது தான் உதிலை ஒரு காணி கிடந்தது கொட்டில் போடுறன்.. கோயில் காணியாம்...

- அவன் அவரை ஊடுருவினான்.

''விட்டிட்டு வந்தது வீடு,



அதுவரை...

புறமாக இருந்த வெட்டையில் இரண்டு புதிய கொட்டில்கள் உருவாகியிருப்பது பட்டது.

நேற்று பற்றை படர்ந்து கிடந்த நிலம் பளிச்சென்று கிடந்தது. கொட்டிலின் தளத்தை மெழுகியபடி ஒருத்தியும், மண்ணள்ளிக் கொட்டியபடி ஒருவனுமாக வாழ்விற்கான பாதுகாப்பை ஏற்படுத்தும் முனைப்புடன் இயங்குவது தெரிந்தது.

பின்னால் காலடி ஓசை: அவன் திரும்பினான்.

ஒரு சிறுமி பிளாஸ்டிக் வாளியுடன் நின்றாள். மிரளும் விழிகளுடன் அவனைப் பார்த்தாள்...

'மாமா... தண்ணி அள்ளலாமா?' - மழலை குறையா மொழி சிந்தியது.

அவன் கையை நீட்டி வாளியை வாங்கி அள்ளிக் கொடுத்தான். அவள் அதே கொட்டிலை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

'மாமா - தண்ணி அள்ளலாமா...' - அந்தக் குரல் அவனுள் சுற்றியது:

- ஒரு புதிய உறவு.

கேணிச் சரிவில் ஏறி மண் பாதையில் மிதந்தவுடன் அந்த புதிய மனிதன் தென்பட்டான். சிரித்தான்.

''நான் யாழ்ப்பாணம் அரியாலை நீங்கள் ?'' கேள்வியுடன் நிறுத்தியது அவனது குரல்.

''நானும் தான்... நான் கொக்குவில்...'' பதில்சொன்னான்

தோட்டம், பொருள், பண்டம்.. எண்டு எவ்வளவோ... ஆனா... அதுகளை எப்பவும் தேடலாம்... சேர்க்கலாம்... உயிர்தானே முக்கியம் என்ன தம்பி நான் சொல்லுறது சரிதானே... சண்டையெண்டு வந்திட்டா சாவு - அல்லது வாழ்வு - இது ரெண்டிலை ஒண்டுதான் மிஞ்சும்.. மற்றதெல்லாம் பிறகுதான் எந்த உருமும் வாழ்வை வீணாய் இழக்கக் கூடாது - அதைவிடப் பெறுமதியானது எதுவுமில்லை.. எனக்கு தெரிஞ்சது இதுதான்.''

- அவர்பேசுவது தத்துவமா? அனுபவமா? - அவன் அதற்கும் சிரித்தான்.

''தம்பியும் பக்கத்து காணியிலை இருக்கிறீர் போலை - நல்ல அயல் இருப்பது சந்தோசம் தான் - நான் வாறன்..'' என்றபடி அவர் நகர்ந்தார்.

- புதிய இடம், புதிய அறிமுகங்கள். புதுப்புது பிரச்சினைகள்.. ஆனால் நான் பழையன எல்லாவற்றையும் இழந்து புதிய மனிதனா? - அவனால்அதனைஏற்பது கஷ்டமாகவே இருந்தது.

□

அவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவள் கேட்டாள்.

''ஏனிப்பிடி ஒரே யோசிச்சுக் கொண்டிருக்கிறியள்... - ஏன் நீங்க பழைய மாதிரி இல்லை...''

''—''

எவ்வளவு கதைப்பியள்... எவ்வளவு எழுதுவியள்... மற்றவையைப் போலத் தானே நாங்களும் ஏதோ அந்த ஷெல் - பொம்பரடி நரகத்திலையிருந்து இப்படியாவது நிம்மதியாக இருக்கிறம் தானே - போனதைப்பற்றி யோசிச்சு என்னப்பா செய்யிறது...''

அவன் நிமிர்ந்து அவளைப் பார்க்காமலே சாப்பிட்டான். இல்லை சாப்பிடமுயன்றான் நெஞ்சுக்குள் ஏதோ அடைப்பது போலிருந்தது.

''என்னப்பா ஏன் சாப்பிடேல்லை என்ன செய்யுது...'' -அவள் துடிப்புடன் கேட்டாள்:

-அவன் கண்ணில் நீர்கோர்வையிட்டு கன்னத்தில் கோடிட்டு கீழிறங்கியது:

- அவள் பதறினாள்... கைகள் நடுங்கின. அவன் அவளை புரிந்து கொண்டவனாகி,

''எனக் கொண்டுமில்லை... றோட்றோட்டாய் எத்தனை குஞ்சுகுருமனுகள் - சாப்பாட்டுக்கு வழியில்லாமல் கையேந்திக் கொண்டு''

- அவன் குரலெடுத்து அழ ஆரம்பித்துவிட்டான்.

அவள் அவனின் ஆத்மாவின் சமிக்ஞையைப் புரிந்து கொண்டாள்.

- அவன் அவனாகத்தான் இருக்கிறான் சிறுமை கண்டு பொங்கி, கொடுமை கண்டு குமுறியவன் இப்போ இன்னோர் உணர்வில் கலங்குகிறான். இங்கே மௌனமே அவனது மொழி, மௌனத்தின் ஓலமேகவிதை... அவனுள் கொந்தளிக்கும் 'மனிதம்' கண்ணீரில் வடிகால் தேடுகிறது. அழட்டும்

- நிமிடங்களில் அவன்தணிந்தான்.

யுத்த விளைவுகளின் அறுவடை பதார்களாகவே இருக்குமோ?

விதைக்கப்படுவது வீரமா? மனித விழுமியங்களா?

யுத்தம் யுக தர்மமெனில்.. எதுதான் அதர்மம்?

அவன் மனக்களத்தில் ஒரு குருசேத்திரம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

□

கொட்டிலின் பின்புறம் நாயுருவிப்பற்றை வெட்டி குவிக்கப்பட்டிருந்தது வெற்றிடமானநிலம்கொத்திப்பட்டு, வட்டவட்டமாய் பாத்திகட்டப்பட்டிருந்தது. நிலத்தைச் சுற்றிலும், கிடைத்த தடிகள் பனைமட்டைகள், ஓலைகள் என்பனவற்றால் சிறுவேலி கூட அரைகுறையாகப் போட்ட நிலையில்

- அவனுக்கு புரிந்தது: 'இது அப்பாவின் வேலைதான்... வயசு எழுபதைத் தாண்டீட்டுது - சும்மா சோம்பியிருக்காத உடம்பு'

- அவன் வெளியே வந்து காணியின் கிழக்கு மூலை

மௌரியன்

யில் நின்ற மாமரத்தை நோக்கி நடந்தான்.

மாமர நிழலில் குட்டான் - அவனின் செல்ல மகள் - தாதி தாவோடு செல்லம் கொஞ்சிக் கொண்டிருந்தாள்.

அவன் குழப்ப விரும்பவில்லை எட்டத்தில் நின்றான். தாத்தாவும் பேத்தியும் பேசுவது காதில் விழுந்தது:

''தாத்தா நாங்க எப்ப எங்கடை வீட்டை போவம்...?''

''சண்டை முடிய...''

''சண்டை எப்ப தாத்தா முடியும்...?''

''கெதியா முடியும் - முடிய வேணும் அப்பதான் வீட்டை போகலாம்''

''ஆமிக்காரனை துரத்தாமை சண்டை முடியாதுதானே - தாத்தா ?''

''ஓமம்மா—''

''எல்லாரும் பேசாமை வீட்டை விட்டிட்டு ஓடி வந்திட்டா எப்பிடித் தாத்தா ஆமிக்காரனை துரத்திறது?''

- தாத்தா பேத்திக்கான பதிலைத் தேடுவது அவரது மௌனத்தில் புரிந்தது:

''எங்கடை சித்தப்பா மாதிரி எல்லாரும் சண்டைக்கு போனா ஆமியைத் துரத்தலாம் தானே...!''

''ஓம் குஞ்சு...''

''அப்ப ஏன் தாத்தா - அப்பாவெல்லாம சண்டைக்கு போகாமை வீட்டுக்குள்ளேயே இருக்கிறார் அவருக்கு வீட்டை கெதியாப் போக விருப்பமில்லையே ?''

தாத்தா பேத்தியை நிமிர்ந்து பார்த்தார்.

- அவனுக்குள் ஏதோ சிறு பொறியொன்று பெருநெருப்பாகியது.

திரும்பி கொட்டிலை நோக்கி நடந்தான்.

□

- இரவு - நள்ளிரவை அண்மிய நேரம்.

- வெளிக் கொட்டில் விறபந்தையில் தாத்தாவின் குறட்டை யொலி.

- தாயைக்கட்டிப்பிடித்தபடி 'குட்டான்' ஆழ்ந்த துயிலில்.

- அவனுக்கு தூக்கமே வரவில்லை. மனதில் குமிழியிடும் சிந்தனைகள். அந்தப் பனி சொரியும் நள்ளிரவில் அவன் தனது தம்பியை நினைத்தான். 'இந்தப்பனியில் எந்த போர்முனையில் விழித்திருப்பானோ?' மெதுவாக எழும்பி விளக்கை கொழுத்தி, அவனது சிறிய சூட்கேசை திறந்து அதன் உட்புற மூடிக்கவருள் சொருகியிருந்த நாதனின் - அவனது தம்பியின் கடிதத்தை எடுத்துப்படித்தான். ஒரு வருடம் முன்னர் அவன் இயக்கத்திற்கு போகுமுன் எழுதிவைத்த கடிதம் அது.

- கடிதவரிகளில் கண்கள் ஓடின.. கண்ணில் நீர் திரும்பியது

'' அண்ணா நீ தமிழில் கவிதை எழுதுவது குற்றம். அதற்காக சித்திரவதை— நாங்கள் தமிழராய்ப் பிறந்தது குற்றம் அதற்காக அடிமை வாழ்வு. அதுதி வாழ்வு இப்படி மனிதத்தை தாரைவார்த்துக் கொடுத்து விட்டு வெறும் சடங்களாக வாழும் வாழ்க்கைக்கு என்னதான்

(10ஆம் பக்கம் பார்க்க)

தளபதி

முடியுமே தவிர இவருக்கு உயர் பதவி வழங்க முடியாது என்ற நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது. இராணுவத் தளபதி பதவி வழங்கப்பட்டால், தான் கையறு நிலையில் இருக்க வேண்டிவரும் என்ற பீதி ஜனாதிபதி சந்திரிகாவை உலுப்புவதினால் இதில் இருந்து மீளுவதற்கு ஜெரிடிசில்வாவிற்குபதவி நீடிப்பு வழங்கி அதன் மூலம் இச்சிக்கலை தீர்த்து விடலாம் எனவும் இதனால் சர்ச்சைக்கு உரியவர் ஆனால் திறமைசாலி எனக் கருதப்படும் றொகான் தளுவத்தையை பாராட்டுடன் மட்டும் பதவியில் இருந்து ஓய்வு பெறச் செய்து விடலாம் என ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டுள்ளார்: அத்துடன் இவர் ஓய்வு பெற்றால் அசோக ஜெயவர்த்தனா அல்லது மேஜர் ஜெனரல் நமுனிக்கு இராணுவத்தளபதி பதவியை வழங்குவதன் மூலம் சகல சிக்கல்களிலிருந்தும் தப்பிக் கொள்ளலாம் என சந்திரிகா கருதுகிறார். இவர்களில் அசோக ஜெயவர்த்தனா இந்திய இராணுவத்துடன் மிக நெருக்கமான பதவி ரீதியிலும், தனிப்பட்டரீதியிலும் உறவையுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது ஆகவே ஜெரிடி சில்வாவிற்குப்பின் இராணுவத்தளபதி ஆகும் வாய்ப்பு இந்தியாவுடன் உறவை வைத்திருக்கும் நபருக்கு வழங்குவதன் மூலம் பல பிரச்சினைகளைத்தீர்க்க முடியும் என்றும்இதன்மூலம்பிராந்திய ஒத்துழைப்பு' என்ற பதம் இராணுவ ரீதியில் நன்மைகளைப்பெற்றுத்தரும் என்றும் சிறிலங்கா அரசாங்கம் கருதுகின்றது. இவ்வகையில் பெரும்பாலும் அசோகஜெயவர்தனாவுக்கு அடுத்த பதவிகிடைக்கும் என பலரும் எதிர்பார்க்கின்றனர்

சந்திரிகா அரசின் பந்தமாதப்போரும் முடங்கிப் போய்விட்ட மூலோபாயமும்

மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகி பத்து மாதங்கள் நிறைவுற்றுள்ளன. சிறிலங்கா அரசைப் பொறுத்து புதிய அரசியற்தலைமை புதிய போர் மூலோபாயம் என்பனவற்றின் அடிப்படையில் நடத்தப்பட்ட இப்போரானது அதற்கு மிகவும் 'செலவீடானதாகவே' இருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்ட ஆட்சியின் பின்னர் அரசாங்கத்தைக் கைப்பற்றிய பொதுசன ஐக்கிய முன்னணி, ஐ.தே.கவுடன் உள்ள ஏனைய முரண்பாடுகள் போலவே வடக்கு - கிழக்கில் ஐ.தே.க. ஆட்சியில் கைக்கொள்ளப்பட்ட போர் மூலோபாய விடயத்திலும் வேறு பட்டு நின்றது. ஐ.தே.க காலத்து போர் மூலோபாயத்தில் காணப்பட்ட தவறே இராணுவத்தோல்விகளுக்கும், புலிகளைத் தோற்கடிக்கமுடியாமல் போனமைக்கு காரணம் எனச் சாடவும் செய்தது.

இதன் பிரகாரம் முன்னைய ஆட்சிக்காலத்தில் போர் குறித்து வகுக்கப்பட்டிருந்த அதாவது செயற்பாட்டின் மூலோபாயம் தலைகீழாக மாற்றப்பட்டது. தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களை துண்டாடுவதோடு, கிழக்கில் இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டை வைத்துக் கொண்டு வடக்கின் மீது தொடர்ச்சியான அழுத்தங்களைக் கொடுப்பதே முன்னைய மூலோபாயமாக இருந்தது. அத்தோடு, வடக்கில் உள்ள முகாம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக தேவைக்கேற்ற விதத்தில் இராணுவ நடவடிக்கையைத் தொடர்வது, பிரதேசங்களைக் கைப்பற்றுவது என்பனவும் கருத்தில் எடுக்கப்பட்டது.

இந்த மூலோபாயத்தின் அடிப்படையில் மூன்று பகுதிகளாக வடக்கு-கிழக்கு அடையாளப்படுத்தப்பட்டன. ஒன்று வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையில் தொடு நிலப்பகுதியாக இருந்த மணலாற்றுப் பிரதேசம். இதைப் பூரணமாக பாதுகாப்பதன் மூலம் புலிகளுக்கு கிழக்கிற்கான தரைவழிப்பாதையைத் தெளிவாகத் துண்டித்துவிடுதல்; அடுத்ததாக கிழக்கில் முகாம்களை விரிவான முறையில் அமைத்து புலிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துதல். மூன்றாவது வடபகுதியில் முகாம்களின் பாதுகாப்பை வலுப்படுத்துவதோடு யாழ். குடாநாட்டிற்கான தரைவழிப்பாதையை அடைத்து விடுதல் என்பனவாக இருந்தது;

ஆனால் மூன்றாம் கட்டப் போர் ஆரம்பமானபோது முன்னைய மூலோபாயம் கிழக்கில் புலிகளின் அதிகரித்த தாக்குதலினால் சிறிது ஈடாட்டம் காணத் தொடங்கிய அதேவேளை பொதுசன ஐக்கிய முன்னணியும் அம் மூலோபாயத்தை தொடர்ந்தும் பேணும் நிலையில் இருக்கவில்லை. இப்போர் மூலோபாயத்தை ஆதரித்த இராணுவ அதிகாரிகள் கூட அரசியற்தலைமையினால் புறந்தள்ளப்பட்டனர் என்றே கூறலாம்;

புதிய அரசியற் தலைமையைப் பொறுத்து அதற்கு மிக விரைவில் ஒரு பெரும் இராணுவ வெற்றி மிக அவசர தேவையாக இருந்தது. இவ் வெற்றியானது வடக்கில் பெறப்பட்டால் மாத்திரமே காத்திரமானதொன்றாகக் கருதப்படும் என்பதையும் அது தெளிவாக அறிந்திருந்தது. இதன் அடிப்படையில் தான் யாழ். நகர் மீதான படை எடுப்பிற்கு மிக வேகமாகத் திட்டங்கள் இடப்பட்டன. ஆனால், அரசியற்தலைமையின் குறிக்கோளுக்கு ஏற்ப வகுக்கப்பட்ட இவ் இராணுவத் திட்டத்திற்கு அரசியற் தலைமையே இராணுவ ரீதியிலான விளக்கத்தையும் கொடுக்கமுன் வந்தது;

இதன் பிரகாரம் முன்னைய மூலோபாயத்தின் படி இருந்த கிழக்கின் கட்டுப்பாடு என்ற அம்சம் கைவிடப்பட்டது.

வடக்கை பிடித்தல் என்பதன் மூலம்- கிழக்கில் புலிகளைச் செயலிழக்கச் செய்யலாம் என புதிய மூலோபாயம் வகுப்பாளர்கள் விளக்கம் அளித்தனர். வடக்கை குறிப்பாக யாழ். குடாநாட்டைப் பிடித்தல் என்பது புலிகளின் தலையை நெரித்தல் என்பதற்கு ஒப்பானதென தெரிவித்த மூலோபாயமானது, தலை நெரிக்கப்படும் பட்சத்தில் வால் செயலிழக்கும் என விளக்கம் அளித்தது.

இதன் பிரகாரமே யாழ். நகரிமீதான பெரும் படை எடுப்பொன்று நடத்தப்பட்டு - 50 நாள் போரின் பின் யாழ். நகர் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டது. பெரும் செலவீட்டுடனும், உயிர் இழப்புடனும் இராணுவம் மேற் கொண்ட படை எடுப்பானது 'யாழ் நகரைப் பிடித்தல்' என்ற பெயரளவிலானதொரு வெற்றியுடன் மட்டும் தற்பொழுது நின்று கொண்டுள்ளது. ஏனெனில் அதன் இராணுவ அரசியற் குறிக்கோள்கள் யாவும் இன்று தோல்வியைத் தழுவியுள்ளன என்பது மாத்திரமல்ல, இராணுவத்தை ஒரு பொறிக்குள் சிக்க வைத்துள்ளது போன்ற தொரு நிலையே தற்பொழுது நிலவுகின்றது.

இராணுவம் இன்று இவ்வாறானதொரு நெருக்கடியில் சிக்கியிருப்பதற்கு அடிப்படைக் காரணங்களில் ஒன்று 'யாழ் நகரைப் பிடித்தல்' என்பதுடன் போர் ஒரு எல்லையைத் தொட்டு விடும் என்று போட்டிருந்த கணக்கும். இதன் காரணத்தினால், போர் மூலோபாயத்தின் அடுத்த கட்டத்தைத்தெளிவாகக்கொண்டிராமையும், தனதுஎதிர்த்தரப்பு அதாவதுவிடுதலைப்புலிகள் இயக்கத்தின் போர்முனை யுக்தி எவ்வாறு இருக்கும் என்பதைப் பற்றி தப்பானதொரு மதிப்பீட்டைக் கொண்டிருந்ததுமே ஆகும்.

யாழ் நகரைக் கைப்பற்றுதல் என்ற மூலோபாயத்தின் மீது வகுக்கப்பட்ட போர் யுக்தியானது, இயன்றளவில் - அதுபல ஆயிரக்கணக்கிலான - புலிகளை அழித்தல் என்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். இதற்கு இரு வழிகள் போர் யுக்தியில் வகுக்கப்பட்டது. ஒன்று நேரடி மோதலில் இயன்றளவு புலிகளை பெரும் அளவிலான சுடுகலன் துணை கொண்டு அழித்தலாகும். இரண்டாவது வலிகாமப் பகுதியை முற்றுகை இடுவதன் மூலம் புலிகளை இயன்றளவில் முற்றுகை இடுவதோடு அழித்தலுமாகும்.

இதன் பிரகாரம் பெருமளவில் புலிகள் பலவீனப்பட்டுப் போய்விடுவார்கள் என்ற ரீதியில் அரசாங்கத்தின் கணிப்பீடு இருந்தது புலிகளில் சுமார் 60 வீதமானோர் கொல்லப்பட்டோ, போரிட முடியாத நிலைக்கோ ஆக்கப்படுவார்கள் என்பது அரசின் ஆரம்ப மதிப்பீடாகும். இக்குறிக்கோளை பின்னர் அமைச்சர் ரத்வத்தையும் வேறொரு விதத்தில் வெளியிட்டிருந்தார். யாழ் நகருக்கான சமரில் 60 வீதமான புலிகள் கொல்லப்பட்டு விட்டதாக அவர் தெரிவித்திருந்தார்.

ஆனால், அரசின் குறிக்கோளானது, இதில் நிறைவேறவில்லை என்பது மட்டுமல்ல, தவறானதொரு மூலோபாயத்தின் அடிப்படையில் போரிட்டதனால் இராணுவம் பெரும் நெருக்கடியையும் சந்திக்க வேண்டியதொரு நிலை உருவாகியது என்றே கூறவேண்டும். இதற்குப் புலிகள் கையாண்ட போர்முறை யுக்தியானது மிகச் சிறப்பு மிக்கதொன்றாக இருந்ததே காரணமாகும்.

ஜெயராஜ்

அதாவது அரசின் குறிக்கோளின் முக்கிய அம்சமான புலிகளைப் பலவீனப்படுத்தல் என்ற அம்சம் நிறைவேறாது பார்த்துக் கொண்டதோடு இராணுவத்தரப்பிற்கு கணிசமான சேதத்தையும் அவர்கள் ஏற்படுத்தத்தவறவில்லை. இச்சமரில் புலிகள் ஒரு முழு அளவினதாக மரபு வழி இராணுவம் போன்று போரிடாத அதேவேளை, தமது தேவைக்கும், வசதிக்கும் ஏற்ப கெரில்லா படை அணி என்ற நிலைக்கும் அப்பால் போரிட்டனர்.

புலிகளின் இப் போர்யுக்தி மூலம் எதிரிக்குப் பலத்த இழப்புக்களை ஏற்படுத்திய அதேவேளை, புலிகள் தமது உயிரிழப்புக்களைக் குறைத்துக் கொள்ளவும், அதேவேளை மக்கள் பாதுகாப்பாக வெளியேறக் கூடிய வாய்ப்பையும் ஏற்படுத்தியிருந்தனர். புலிகளின் இப் போர் முறையுக்தியே யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய பின்னரும் அவ் வெற்றி குறித்து பலத்த கேள்வியை ஏற்படுத்தியிருந்தது அதாவது அரசியல் இராணுவ ரீதியிலான அனுகூலங்கள் எதுவுமற்ற நிலையில் யாழ். நகர் இராணுவத்திடம் வீழ்ச்சிகண்டது இந்நிலையானது சிலவாரங்களிலேயே அரசிற்கும், இராணுவத்தினருக்கும்பெரும் சுமையானதாக மாறியது.

அதாவது வலிகாமத்தில் பெருந்தொகை துருப்புக்களை முடக்க வேண்டி வந்தமையானது பெரும் செலவீடானது மட்டுமல்ல, ஏனைய இடங்களில் இராணுவத்தின் பெருப் அசைவிற்கு அது விட்டுக் கொடுப்பதாகவும் இருக்கவில்லை.

இதேசமயம் யாழ். குடாநாட்டின் மீதான அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து அரசாங்கத் தரப்பில் அடிக்கடி பேசப்பட்டதாயினும் அது குறித்து இதுவரை முயற்சி ஏதும் நடைபெறவில்லை என்பதுவெளிப்படையானதாக இருந்தது இந்த நிலையில், இராணுவத்தின் மூலோபாயமானது நிச்சயமாக ஒரு நெருக்கடிக்குள் உள்ளாகியுள்ளது எனக் கூறலாம்.

ஏனெனில், யாழ் நகரைப்பிடித்தல்என்பதுமட்டும், யாழ். குடா நாட்டின் மீதான படை யெடுப்பின் முழுமையான நோக்கமாக இருக்க முடியாது. ஏனெனில் வலிகாமத்தில் மட்டும் இராணுவம் நிலை கொண்டிருப்ப தென்பது ஒருவகையில் முற்றுகைக்கு உள்ளாகியிருப்பதுபோன்றதே.

இதனை உணர்த்துமாப் போன்ற சம்பவங்களும் இடம் பெறாமல் இல்லை. சிறிலங்கா இராணுவத்தரப்பால்குடாநாட்டில்நிலை கொண்டுள்ள படையினருக்குத் தேவையான விநியோகத்தை ஒழுங்காக மேற் கொள்ள முடியாமல் இருப்பது சகலருக்கும் தெரிந்தவிடயம். தரைவழிப்பாதை முற்றாகத் தடைப்பட்டுள்ளது என்ற நிலை ஒரு புறம்இருக்க கடல் வழி, வான் வழி, விநியோகங்களிலும் பெரும் சிரமத்தின்மத்தியிலேயே மேற் கொள்ளப் படுகிறது. இம் முயற்சியில் விமானப்படை விமானங்கள் இழக்கப்பட்டதும் உண்டு.

ஆனால் இவ்வாறானதொரு நெருக்கடியாழ் நகர் மீதான படை எடுப்பிற்கு முன்னதாகவே இருந்து வந்தது பலாலியிலும், தீவகத்திலும் ஆனையிறவிலும் உள்ள படையினருக்கு விநியோகம் என்பது பகிரத பிரயத்தனத்தில் செய்யப்படும் ஒன்றாக இருந்தது. இந்தநிலையில்' மேலும் பல்லாயிரக்கணக்கான துருப்புக்களை தரைவழி விநியோகம் இன்றியும் கடல் மற்றும் வான்வழி விநியோகத்தை சீராக்காமலும் வலிகாமத்தில் இறக்கியமையானது அடுத்த கட்ட நடவடிக்கை மூலம் அவற்றைச் சீர் செய்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையானதே ஆகும்.

ஆனால் நிலைமை அவ்வாறு இருப்பதாகத் தெரியவில்லை மூலோபாயத்தின்படி அடுத்தகட்ட நகர்விற்குச் செல்லக் கூடிய நிலையில் இராணுவம் இருப்பதாக இருந்தால் இதுவரையில் அதாவது யாழ்நகர் மீதான படை எடுப்பை முடித்து சுமார் பத்து வாரங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அடுத்த நடவடிக்கையை இராணுவம் எடுக்காது இருந்திருக்கமாட்டாது.

இதேசமயம், இராணுவம், கிழக்கில் ஒப்பரேசன் 'ரிவிகிரண' என்ற பெயரில் மேற் கொண்ட இராணுவ நடவடிக்கையானது ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்பது வெளிப்படையான தொன்று; இவ் இராணுவ நடவடிக்கையினை இராணுவம் விடுதலைப்புலிகளைச் சந்திக்காமலே முடித்துக் கொண்டமை இதன் நோக்கத்தை வெளிக் காட்டப் போதுமானதாக இருந்தது.

அத்தோடு வலிகாமத்தில் பல்லாயிரக்கணக்கான துருப்புக்களைக் குவித்துள்ள நிலையில் இராணுவ பாதுகாப்பான விநியோக வழி ஒன்றை பெறுதல் குறித்து மூலோபாயத்தில் வகுக்காமல் இருந்திருக்க முடியாது. அதாவது வவுனியா ஊடாகவொரு தரைவழிப்பாதையை திறப்பது குறித்து மூலோபாயத்தில் திட்டம் இடப்பட்டே இருந்திருக்கும். இது குறித்துப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை மற்றும், ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா ஆகியோர் பிரஸ்தாபிக்காமல் இல்லை.

இந்த ரீதியில், சந்திரிகா அரசின் மூலோபாயமானது நிச்சயமாக யாழ் குடாநாட்டை முழுமையாகக் கைப்பற்றுவதற்கும், வவுனியாவில் இருந்து ஒருதரைவழிப்பாதையைத்திறப்பதுகுறித்தும்திட்டத்தைக்கொண்டிருப்பதோடு, கிழக்கைப் பேணுவதற்கான வழி முறைகளையும் கொண்டதாகவே வகுக்கப்பட்டிருக்க முடியும்.

ஆனால் யாழ் குடாநாட்டில் மூன்றிலொரு பகுதியில் போரை நடத்தியதன் மூலோபாயம் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டி வந்துள்ளது என்பதையே இன்றைய நிலை காட்டுகின்றது. அதாவது இம்மூலோபாயத்தின்படி போரை நடத்திச் செல்ல முடியுமா? அவ்வாறு நடத்திச் சென்றாலும் கூட புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியுமா? தோற்கடிக்கக் கூடிய ஆற்றல் இராணுவத்திற்கு உண்டா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது

இவற்றை விட தற்பொழுது அரசிற்கு மிகவும் சிக்கலானதும் மோசமானதுமான பிரச்சினையாக எழுந்துள்ளது வடக்கு-கிழக்கிற்கு வெளியில் எவ்வாறான பாதுகாப்பு யுக்திகளைக்கையாள்வது என்பதாகும். சிறிலங்கா அரசின் கணிப்பின்படி வடக்கு-கிழக்கிற்கு வெளியில் குறிப்பாக கொழும்பில் பல குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் நிறைய உண்டு என்பதாகும். அத்தோடு எல்லையோரக் கிராமங்கள் மீது தாக்குதல்கள் இடம்பெறலாம் எனவும் அரசு கருதுகின்றது,

இந்த நிலையில் சந்திரிகா அரசானது இன்று வகுக்க வேண்டிய போருக்கான மூலோபாயம் முன்னைய திட்டங்களை விட விரிவானதாகவும் பல நோக்குக் கொண்டதாகவும் இருக்க வேண்டியநிர்ப்பந்தம் கொண்டதாக இருக்கின்றது. அதாவது வடக்கு-கிழக்கில் புலிகளை ஒடுக்குதல் என்பது மட்டுமல்ல தென்னிலங்கையில் குறிப்பாகத் தலைநகரத்தைப் பாதுகாத்தல் என்பது தொடர்பாகவும் விரிவான அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டியிருக்கும்.

இந் நிலையில் கடந்த 10 மாதப் போரில் சந்திரிகா குமாரதுங்க அரசானது எண்ணியது போல் புலிகளைத் தோற்கடிக்க முடியவில்லை என்பதுமட்டுமல்ல போர்தானாகவே இலங்கைபூராவும் பரவி விட்டது என்றதொரு நிலையே ஏற்பட்டு விட்டது. சந்திரிகா அரசின் போர் மூலோபாயமே அசைய முடியாத ஒரு நெருக்கடிக்குள் இராணுவத்தைச் சிக்க வைத்துள்ளது என்றே கொளளலாம்- இந்த நிலையில் சந்திரிகா அரசின் முன்னால் இராணுவ தீர்வின் அடுத்த கட்டம் என்ன என்பது குறித்து பலமான கேள்வி உள்ளது 'அதாவது முடங்கிப்போன தற்போதைய மூலோபாயத்தையே ஏதாவது வழியில் தொடர்வதா? அன்றிப் புதியதொரு மூலோபாயத்தை வகுக்க முனைவதா என்பதே அதுவாகும்.

எம் கண்முன்னே பல்கலைமாணவன் மூச்சுத்திணறி துடிதுடித்து இறந்தார்

(நமது நிருபர்)

''தற்கொலைப் படையாளியின் பாரம் எவ்வளவு என்று பார்க்கிறேன்'' என்று கூறிய இராணுவ அதிகாரி எனக்கு அருகில் நின்ற பல்கலைக் கழக மாணவனின் கழுத்தில் பிடித்து சுவரோடு சேர்த்து தூக்கினார். இதனால் மூச்சுத் திணறிய அந்த மாணவன் துடிதுடித்து இறந்தார்.

இவ்வாறு கொழும்பு செல்வதற்காக சென்று இராணுவத்தால் சித்திரவதை செய்யப்பட்டு நேற்று முன்தினம் திருப்பி அனுப்பப்பட்ட சாவகச்சேரியை சேர்ந்த சந்திரன் (வயது 31) என்பவர் தான் நேரில் பார்த்த இச்சம்பவம் பற்றி எமது செய்தியாளருக்கு தெரிவித்தார் அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில்;

இம்மாதம் 12-ம் திகதி கொழும்பு செல்லவென சென்ற என்னையும் இன்னும் பலநூற்றுக்கணக்கான பயணிகளையும் வவுனியா தாண்டிக்குளம் இராணுவ முகாமில் கொளுத்தும் வெயிலில் பலமணி நேரம் நிற்கவிட்டனர். பின்னர் அங்கு வந்த ஒரு இராணுவச் சிப்பாய் எம்மில் 75 பேரையே முதலில் கொழும்பு செல்ல அனுமதிக்கப் போவதாக கூறியதும் நானும் சில இளைஞர்கள் யுவதிகள், வயோதிபர்கள் உட்பட எழுபத்தைந்து பேரும் அச்சிப்பாயுடன் சென்றோம் எம்மை அழைத்துச் சென்றவர்கள் தாண்டிக்குளம் இராணுவ முகாமுக்கு அண்மையில் உள்ள கமினி மகாவித்தியாலயத்தில் எம்மை 5 நாட்களாக பால் வேறுபாடின்றி அடைத்து வைத்தனர். இந்நாட்களில் எம்மைப் புகைப்படம் பிடித்தும் எம்மைப் பற்றிய சகல விபரங்கள், அடையாள அட்டை, உடைமைகள் என்பவற்றை பெற்றுச் சென்ற சிப்பாய்கள் இவை புலனாய்வுப் பிரிவினருக்கு அனுப்பி வைத்து அங்கிருந்து பொலிஸ் பிரிவின் அனுமதி கிடைத்த பின்னே உங்களை கொழும்பு செல்ல அனுமதிப்போம் என தெரிவித்தனர். ஆறாம் நாள் பொலிசார் புலனாய்வுப் பிரிவுக்கு கொடுத்த தகவலை படுத்து என்னுடன் சேர்த்து எண்மரை 'தற்கொலைப் படையாளிகள்' என்ற பெயரில் இராணுவத்தினரிடம் கையளித்தனர்.

நானும் இரு யுவதிகளும் ஒரு பல்கலைக் கழக மாணவனும், ஒரு வயோதிபரும் உட்பட எண்மருமே ''தற்கொலைப் படையாளிகள்'' என்ற பெயரில் தனியான ஓர் அறைக்கு இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டோம். அவ்வறைக்கு வந்த இராணுவ அதிகாரி ஒருவர் ''நீங்கள் புலிகளின் தற்கொலைப் படைதானே உங்களை கொழும்பு செல்ல விடமாட்டோம்' என்று கூறவே எம்மோடு நின்ற ஒரு யுவதி தான் திருமணம் செய்வதற்காக வெளிநாடு செல்வதற்கு தன் தந்தையுடன் வந்ததாகக் கூறிய போது அதனை மறுத்து யுவதியின் கன்னத்தில் மீது பலமாகத் தாக்கினார்! இரத்தம் வழிந்த நிலையில் காணப்பட்ட யுவதி தன் தந்தையின் அருகே அழுதவண்ணம் நின்றார்.

பின்னர் எனக்கு அருகில் நின்ற பல்கலைக் கழக மாணவனை ''நீ தற்கொலைப் படையாளிதானே'' என்று கேட்டதும் இல்லை! நான் பல்கலைக் கழக மாணவன் என்று சான்றுகளைக் காட்டிய போதும் அதனை மறுத்த இராணுவ அதிகாரி அம் மாணவனின் கழுத்தைப் பிடித்து நெரித்த போது தன்னை ஒன்றும் செய்யாதீர்கள் என கேட்கவே, 'தற்கொலைப் படையாளியின் பாரம் எவ்வளவு என்று பார்க்கப் போகிறேன்'' என்று கூறியபடி அவ்விளைஞனின் கழுத்தை பிடித்து சுவரோடு சேர்த்து தூக்கிய போது மூச்சுத் திணறி துடிதுடித்து பரிதாபமாக எம் கண்முன்னே மரணமானார்.

எனக்கு அந்த இளைஞனைத் தடுத்து வைத்திருந்த நான்கு நாட்களில் தான் தெரியும். மருதானைக்கு செல்லவிருந்த அந்த மாணவன் பெயர் மதியழகன் எனக் கூறிய அவர் மேலும் தொடர்கையில் இதைக் கண்ட எமக்கு என்ன செய்வதென்று புரியாமல் விழித்துக் கொண்டு நின்றோம்.

அப்போது அவ்விளைஞனின் சடலத்தை அவ்விடத்தில் போட்டு விட்டு என்னை நோக்கி வந்து ''உங்களுக்கும் இப்படிச் செய்து அனுப்ப முடியும்'' என்று கூறி என்னைக் காலால் பலமுறை உதைத்தார். அந்த இராணுவ அதிகாரி 'அந்த இளைஞனுக்கு நேர்ந்த கதிதான் எமக்கும் என்று எமக்குள் எண்ணியபடி நின்ற எங்களை பார்த்து, அந்த இளைஞனின் சடலத்தை தூக்கிகொண்டு வெளியே போகும்படி சொன்னார்கள். மேலும் 'இனிமேல் கொழும்புக்கு வரக்கூடாது போ'' என்று கூறி எம்மை திருப்பி அனுப்பி விட்டனர்.

தப்பினேன் பிழைத்தேன் என்று நினைத்தபடி ஒருவாறு வந்து விட்டேன் இனி கொழும்புக்கே போவதில்லை என்றார். இராணுவத்தின் துன்புறுத்தலால் அதிர்ச்சியடைந்து நோய்வாய்ப்பட்ட நிலையிலேயே அவர் இத்தகவல்களை எமது செய்தியாளருக்குத் தெரிவித்தார். (அ)

தொடர்புகொள்க

வண்ணார்பண்ணை வடமேற்கு இலக்கம் 142 பாரதி வீதியை சேர்ந்த துரைச்சாமி துரைநாயகம் என்பவரை மருமகனான காந்தரூபன் தேடுகிறார். ஈழநாதம் கல்வயல் சாவகச்சேரி பணிமனையில் பூலோகராசா என்பவருடன் தொடர்பு கொள்ளவும்.

தீர்வு

கியகால நோக்கிலோ யுத்த அரசியல் தந்திரோபாயம் இன்றிபிரச்சினையைத் தீர்க்க முடியாது. மாறாக இது மேலும் பல பிரச்சினைகளையே உருவாக்கியுள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் கொழும்பிலும் இன்றுபோர் தொடர்கிறது அரசு எவரையும் நம்பவில்லை.

ரிவிரச நடவடிக்கை எமது படையினரின் துணிவின் காரணமாக கிடைத்த இராணுவ ரீதியிலான வெற்றியே. வலிகாமத்தை கைப்பற்றியதன் கேந்திர முக்கியத்துவ தந்திரோபாயம் என்ன? தந்திரோபாய ரீதியில் இது ஒரு தோல்வியே. வலிகாமத்தில் 40 ஆயிரம் படைகள் உள்ளனர்; அவர்களுக்கு விநியோகம் செய்வதற்கான வழிவகைகளை அரசு இப்போது தேடிக் கொண்டிருக்கின்றது. தற்போதைய நிலையில் விடுவிக்கப்பட்ட பகுதியில் எமக்கு விசுவாசமான மக்களின் தொகையே நடவடிக்கையின் வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் வலிகாமத்தில் 10 ஆயிரம் பேர் இருப்பதாக கூறப்படுகிறது 40 ஆயிரம் படையினர் இருக்கின்றனர். எனக்குறிப்பிட்டார்.

இளைஞரை

வதிவிடத்திற்கு திரும்பிவர வில்லையென தெரியவந்துள்ளது.

ஆவரங்காலில் இருந்து இடம்பெயர்ந்து மட்டுவிலில் தங்கியிருந்த வே. இரத்தினசிங்கம் (33) என்பவரே திரும்பி வந்து சேரவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில்

ஒருவரான பல்கலைக் கழக மாணவனான மதியழகன் என்ற இளைஞனை இராணுவ அதிகாரி ஒருவர் கழுத்தை நெரித்து துடிதுடிக்கக்கொன்றதாக நேரில் கண்டவர் தெரிவித்தார். (அ)

வவுனியா

யிட்டதுடன் புகைப்படங்களும் எடுத்தனர். இதேவேளை வவுனியாவிற்கும், கொழும்பிற்கும் பயணங்களை மேற்கொள்வதற்கென வவுனியா வந்தவர்களும் படையினரால் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

மோட்டார்

பதிவு மேற்கொண்டபோது புகைப்படம் ஒப்படைக்காத மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் தமது பகுதிக் கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிக்கும் அளவிலான இரண்டு புகைப்படங்களுடன், 96ஆம் ஆண்டு வரி அட்டை பெற வரும்போது செயலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதையும், வன்னி பெருநிலப்பரப்பில் உள்ள மோட்டார் ஊர்திகளுக்கான ஆண்டு வரி அட்டை வழங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்பதையும் ஊர்தி உரிமையாளரின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறியத்தருகின்றனர்.

மரண அறிவித்தல்கள்

திருமதி சின்னக்குட்டி வேலுப்பிள்ளை

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்ட வரும் தற்போது கிளிநொச்சி திருவையாறு முதலாம் பிரிவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னக்குட்டி வேலுப்பிள்ளை நேற்று 18-02-1996-ல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், நடராசா (தலைவர்), தியாகலிங்கம் (ஜேர்மனி), ஆகியோரின் அருமைத் தாயாரும், மகேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாருமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இரணைமடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

சாமி
56/1 திருவையாறு.

தகவல்:
வே. நடராசா
(மகன்)

(14903)

சுப்பிரமணியம் சரஸ்வதி

துர்க்காபுரி, கேணியடி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவி சரஸ்வதி அவர்கள் 17-2-96-ல் இறைவனடி சேர்ந்துள்ளார். இவர் கனகரத்தினம், செல்வராணி, நடராசா (லண்டன்) அன்னராணி, பவளராணி, கமலராணி, காலஞ்சென்ற செல்வராசா இவர்களின் அன்புத்தாயாரும், சரஸ்வதி, இராசேந்திரம், ஜெயசேகரா (பிரான்ஸ்), பிறேமாவதி (லண்டன்), பாலகிருஸ்ணன் (சுவிஸ்), விஸ்வகுமார் ஆகியோரின் மாமியாரும் சந்திரா, லதா, கீதா (போராளி) பகீரதன் (சுவிஸ்), றஜிதா, சந்திரன் சந்திரா, இந்து, ஜெயா, இந்திரன், குமார், ராணி, கவிதா, நகுலன், செந்தூரன், காண்டீபன், திலிபன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஆஸ்பத்திரி வீதி, வரணியில் 18.2.96-ல் நடைபெற்றது; இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்
முருகையா பத்தர்
(சகோதரர்)

(15767)

அதுவரை

அர்த்தம்? நீ எழுதுவாயே... மண்ணுக்கு பாரமாகாதேமரணத்திலும் வாழ விரும்பு - என அது எவ்வளவு உண்மையானது - உன் எழுத்து யார்யாரைப் பாதித்ததோ தெரியாது - ஆனால் என்னை பாதித்தது - நன்றி - உன் எழுத்து ஒரு போராளியை மண்மீட்புக்காக உருவாக்கிய சக்தியுள்ளது என பெருமைப்படு - இன்னும் எழுது - என்னை இழந்ததையிட்டு குழம்பவேண்டாம் இழப்பதற்கு மட்டுமல்ல, வெல்வதற்கும் நிறைய இருக்கிறது இழப்பது வெறும் உடமையும், உயிரும்தான் ஆனால் வெல்லவேண்டியது உரிமை மீட்க வேண்டியது எங்கள் மண்... ஆகவே இன்னும் நிறையவே எழுது - போரை வெல்ல போராளிகள் தேவை - உன் பேனாவுக்கு அவர்களை உருவாக்கும் வல்லமையுண்டு -

- மேலே படிக்க முடியாது விம்மும்மனம்-பீறிடும் உணர்ச்சி, புறங்கையால்கண்களை அழுத்தித் துடைத்து - நெடுமூச்செறிகையில் வாழ்வு பற்றிய நம்பிக்கையீனமும் அதனோடு கலந்து வெளியேறிய சுகம்.

- இடம் பெயர்ந்த மக்கள்- அவர்களின் எல்லையற்ற தியாகத்தின் பின் தொடர்ந்த துயரங்கள், சோகங்களை, இழப்புகள் ...எல்லாம் அந்த நள்ளிரவில் நிழலாடியது. முகங்கள் ... முகங்கள் ... மனிதமுகங்கள் எதை எதையோ நம்பிக்கையுடன் எதிர்பார்க்கும் முகங்கள் ... வீதியில் அலைவில், சோகங்களை சுமந்தும் வாழ்வினை இயல்பு நிலைக்கு மாற்ற முயலும் முனைப்பும் தெறிக்கும் முகங்கள் ...

மனைவி, மகள், தாத்தா, காலையில் சந்தித்த வாத்தியார், அவர் குடும்பம் ... எல்லாரும் சூழ்நிலையை அநுசரிக்கக் கற்றுக் கொள்ள தான் மட்டுமே அதிலிருந்து அந்நியமாகி ... உலகின் சோகங்களை தாங்கி கண்ணீர் சிந்தும் பலவீனனாக உணர்கையில்: ஒரு விதமான அவமானம் கவ்வ -

விருட்டென எழுந்து, ஓர் ஓர்மம் வலுப்பெற தனது குறிப்புப்புத்தகத்தை எடுத்து எழுத ஆரம்பித்தான். ★★

- அதிகாலையில் திடுக்குற்று விழித்த அவள். அவனது தலை மாட்டிற்கு சற்று அப்பால் விளக்கு எரிவதையும், அதனருகே விரித்த குறிப்புப் புத்தகமும் மூடாத பேனையும் இருப்பதைக் கண்டாள். எழுதிய வரிகள் கண்ணை உறுத்தின

- ஒரு ஆவல் உந்த அதனை எடுத்து படிக்க ஆரம்பித்தாள்.

மூச்சு விட,
திசை துழாவி விழிகள்
பார்க்க
காலாற, அச்சமின்றி
பனி மின்னும் புல்வெளியில்
நடக்க
பறவைகளின் இறகசைவை,
இன்னிசையை...
முகிலோவியங்களை...
இன்னும் எதை எதையோ
மெய்மறந்து ரசிக்க -
கவிதை எழுத...
சுதந்திரம் வேண்டும் -
எனது பூமி- எனது வானம்
எனது காற்று - எனது
மொழி
என் வசமாக இருக்க
வேண்டும்...
இல்லாதவரை;
இழப்பை வெல்லபோராடு
அதுவரை-
நீ மனிதனல்ல .. புரிந்து
கொள் -

- கவிதை அரை குறையாக இருக்கிறதா- முடிக்கப்பட்டதா- அவளுக்கு புரியவில்லை. - புரியாவிட்டாலென்ன. அவள் அவனுள்ளான அவனை இழக்கவில்லை. அவள் மட்டுமா? ★

★ ஏழாம் ஆண்டு சிறப்பிதழ் ★

இப்பத்திரிகை சாவகச்சேரி மட்டுவில் ஈழநாதம் பணிமனையில் 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது